www.eelamview.com

விடுதலைப்புலிகள்

குரல்: 133 ஐப்பசி-கார்த்திகை, 2006 அன்பளிப்பு: 12/=

உள்ளே...

03 தீர்ப்பை எழுதும் திடத்தை...
05 சர்வதேச அபிப்பிராயத்திற்கு...
06 மனித வரலாறும் ...
08 தொடரும் பயணம்
10 உலைக்களம்

# தமிழீழத் தனியரசை நிறுவுவதென முடிவு

**எத்தனை யுகங்கள் ஆனாலும் தமிழருக்கு உரிமைவழங்க சிங்கள தேசத்து மன உலகில் மாற்றம் வரப் போவதில்லை என்பது நிரூபனமாகியிருக்கின்றது. ஆறுவருட அமைதிக்காலத்தில் சமாதானத்தில் எமக்குள்ள பற்று றுதியை தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றோம். போதுமான அளவுக்குமேல் பொறுமை காத்திருக்கின்றோம். வாய்ப்புக்களை வழங்கியிருக்கின்றோம். இதனை உலகம் நன்கு அறியும்.**

**ஜனாதிபதி மகிந்தவுக்கு கொடுத்த வாய்ப்பை கொச்சைப்படுத்துவதுபோல், ஏளனம் செய்வதுபோல் மகிந்த தமிழின அழிப்புப் போரை தீவிரப்படுத்தியிருக்கின்றார். அனைத்துக்கட்சி மாநாடு என்று உலகை ஏமாற்ற சதிநாடகம் ஆடுகின்றார். இனியும் நடக்கமுடியாத விடயத்தில் நம்பிக்கை வைத்து நடைபோட நாம் தயாரில்லை. இன்றைய நாளில் சுதந்திர தமிழீழ தனியரசை நிறுவுவதென முடிவுசெய்திருக்கின்றோம். என தனது மாவீரர்நாள் நினைவுரையில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தனது கொள்கை நிலைப்பட்ட கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.**

**தமிழீழ தேசியத் தலைவர் அவர்களது மாவீரர்நாள் உரையின் முழுமையான வடிவம்:-**

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள். இந்நாளை எமது மாவீரர்களின் பெருநாளாக, எமது தியாகிகளின் திருநாளாக, எமது தேசத்தின் தேசிய நாளாக, எமது இனம் சுதந்திரம் வேண்டி உறுதிபூணும் புரட்சிநாளாக நாம் கொண்டாடுகிறோம்.

இந்த உலகத்தைத் துறந்து, இளமையின் இனிமையான உணர்வுகளைத் துறந்து, சாதாரண வாழ்வின் சகலவற்றையும் துறந்து, எமது மண்ணுக்காக, எமது மக்களுக்காக, எமது மக்களது உயிர் வாழ்விற்காகத் தமது உன்னதமான உயிர்களை உவந்தளித்த உத்தமர் களுக்கு இன்று நாம் சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறோம்.

எமது மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள். தேசிய விடுதலை என்கின்ற உயரிய இலட்சியத்திற்காக வாழ்ந்து அந்த இலட்சியத்திற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்தவர்கள். இதனால் தான் இவர்கள் சாதாரண மனிதர்களிலிருந்து வேறுபட்டு நிற்கிறார்கள், உயர்ந்து நிற்கிறார்கள். எமது தேசத்தின் வரலாற்றில் சங்கமமாகி நிற்கிறார்கள்.

தோற்றம், மாற்றம், மறைவு என்ற சூட்சுமச் சுழற்சியிலே காலம் நகர்கிறது. ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கும் இந்தக் காலநதியில் காலத்திற்குக்காலம் தோன்றிமறையும் நீர்க்குமிழிகள் போன்று நிலை யற்றதாக மனிதவாழ்வு சாவோடு முடிந்துபோகிறது; முற்றுப்பெறுகிறது. ஆனால், எமது மாவீரர்களது வாழ்வும் வரலாறும் அப்படியானவையல்ல. மரணத்தின் பின்னாலும் அவர்களது வாழ்வு தொடர்கிறது. சாவோடு அவர்களது வாழ்வு அடங்கிப்போகவில்லை. அவர்கள் தமிழன்னையின் கருவூலத்தில் நித்திய வாழ்வு வாழ்கிறார்கள். சத்தியத்தின் சாட்சியாக நின்று, மனவலிமையின் நெருப்பாக எரிந்து, எம்மைச் சுதந்திரப் பாதை யில் வழிகாட்டி, நெறிப்படுத்திச் செல்கிறார்கள்.

மனித நாகரீகம் தோன்றிய காலம் தொட்டே மனிதகுலம் விடுதலைவேண்டி வீறுடன் போராடிவருகிறது. வீறுகொண்டெரியும் இந்தப் போராட்டங்களை அடக்கியொடுக்க ஆக்கிரமிப்பாளர்களும் அடக்குமுறையாளர்களும் காலங்காலமாகப் பல்வேறு உத்திகளைக் கையாண்டுவருகிறார்கள். முதலிற் போர் அரக்கனை ஏவுவதும் அது முடியாதுபோக, போராடும் இனங்களின் விடுதலைப் பாதையைத் திசை திருப்பி, அவர்கள் போகும் வழிகளெல்லாம் பொறிகள்வைத்து, சமாதானச் சதிவலைக்குள் சிக்கவைத்து, காலத்தால் மோசம் செய்து, சமாதான மாயைக்குள் தள்ளிவிட்டு, அமைதியாக அழித்தொழிப்பதுவும் வரலாற் றிலே நீண்ட நெடுங்காலமாக நடந்துவருகிறன. இந்த உத்தியை எமது சுதந்திர இயக்கத்திற்கெதிராகவும் செயற்படுத்திவிடலாம் எனச் சிங்கள

(உரையின் தொடர்ச்சி 11ஆம் பக்கத்தில்)



மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் உரையாற்றியபோது...

**தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு**

www.eelamview.com

www.eelamview.com



# தமிழீழத் தனியரசை நிறுவுவது என்று தலைவர் பிரபாகரன் உறுதியுரை

புலிகளின் குரல்

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் வருடாந்த மாவீரர் நாள் உரை வழமை போலவே பல்வேறு அரசியல் - இராணுவ கருத்துக்களையும் - புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடுகளையும் உள்ளடக்கி வெளிவந்துள்ளது.

மண்மீட்புப் போரில் விதையாகிப்போன மாவீரர்களின் உயிர் ஈகங்களையும் - களத்தில் அந்த மண்ணின் மைந்தர்கள் காட்டிய வீரத்தையும் புகழ்ந்துரைத்த தலைவர் அவர்கள் அவர்களுக்கு மதிப்பளித்து - கௌரவம் சூட்டியுள்ளார். சாதாரண மனிதர்களின் சாவுகள்போல் அல்லாமல், சாவின் பின்னாலும் தமிழ் அன்னையின் கருவூலத்தில் நிரந்தரவாழ்வை வாழும் சரித்திர மனிதர்கள் அவர்கள் என புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழர்களும் - தமிழர் விடுதலைப்போராட்டமும் சிங்களத்தின் போர்வேள்வியில் புடம்போடப்படுவதுபோல அதன் சமாதானச் சதிகளிலும் சூழ்ச்சி அரசியலிலும் சிக்காது வெற்றி இலக்கு நோக்கி வீறுநடைபோடுகின்றது என்றும் தலைவர் அவர்கள் பிரகடனம் செய்துள்ளார்.

சர்வதேசத்தின் அனுசரணையுடன் கடந்த ஐந்து வருடங்களாக நடாத்தப்பட்டுவந்த சமாதான முயற்சிக்கு சிங்கள அரசு எவ்வாறு திட்டமிட்டுச் சாவுமணி அடித்து வருகின்றது என்ற அரசியல் உண்மையைத் தலைவர் அவர்கள் தனது உரையில் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளார்.

தமிழினத்தைப் பூண்டோடு அழித்து - இலங்கைத் தீவை சிங்கள - பௌத்த நாடாக மாற்றும் பேரினவாத இலட்சியத்தை அடையும் ஒரு நோக்குடன் மகிந்த அரசானது போரையும் - சமாதானத்தையும் பயன்படுத்த முயல்கின்றது என்ற உண்மையும் தலைவரின் உரையில் அம்பலப்படுத்தப் பட்டுள்ளது.

ஐந்து வருடங்களையும் தாண்டி நீண்ட இந்தச் சமாதான காலத்தில் தமிழர்கள் எந்த நன்மைகளையும் அனுபவிக்கவில்லை. மாறாக போர்க்கால அழிவுகளையும் - துயரங்களையுமே அனுபவித்து வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். சிங்களப் படைகளாலும் - ஒட்டுக் குழுக்களாலும் தமிழ்மக்கள் வகைதொகையின்றிக் கொல்லப் பட்டுள்ளனர். குடும்பம் குடும்பமாக சித்திரவதை செய்து கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தமிழின அழிப்பு தமிழர் தாயகத்தில் மட்டும் நடாத்தப்படவில்லை. தென்னிலங்கையில் வாழும் தமிழர்களும் வேட்டையாடப்பட்டுள்ளனர். காணாமல் போதல் என்ற பெயரில் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் கடத்தலுக்கும் - காணாமல் போதலுக்கும் எதிராக கொழும்பில் அமைக்கப்பட்ட அமைப்பொன்றின் முக்கிய உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களும் வீதியில்வைத்து பகிரங்கமாகக் கொல்லப்பட்டார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை சிங்கள அரசு ஏற்றுக் கொள்ளவும் இல்லை, அதை நிராகரிக்கவும் இல்லை. போர்நிறுத்த உடன்பாடொன்று அமுலிலுள்ளபோதே பெருந்தொகை மக்கள் கொல்லப்பட்ட அவலநிகழ்வு உலகெங்குமே நிகழவில்லை. இங்குமட்டுமே அந்த விசித்திரமான - அவல நிகழ்வுகள் நடக்கின்றன. இவற்றை உலகசமூகமும் கண்டு கொள்ளாமல் மௌனம் காத்துவருகின்றது என்று தலைவர் அவர்கள் தனது உரையில் கவலை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, சிங்கள அரசின் சதி அரசியலுக்குள் - அமைதி முயற்சிகள் என்று வந்த சூழ்ச்சிப் பொறிக்குள் எமது இயக்கம் எதிரி எதிர்பார்த்ததுபோல சிக்கிச் சீரழியவில்லை. மாறாக புதுப்பொலிவுடன் - புத்தூக்கத்துடன் எழுச்சி பெற்று நிற்கின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

'விசாரணைக் கமிக்ஷன்கள்' - 'அனைத்துக்கட்சி மாநாடுகள்' என்ற பெயர்களில் சிங்கள அரச தலைவர்கள் காலத்திற்குக் காலம் உலகை ஏமாற்ற ஆடும் அரசியல் நாடகங்களையும் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ள தலைவர் அவர்கள் இந்த அரசியல் கூத்துக்களின் உள் நோக்கங்களை அறியாது - அல்லது அறிந்தும் அறியாதது போல உலகம் வாழாவிருக்கின்றது என்ற கசப்பான உண்மையையும் தலைவர் அவர்கள் வேதனையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் அவர்களின் மேற்பார்வையில் சிங்கள அரசு செய்துகொள்ளும் ஒப்பந்தங்களை - உடன்பாடுகளை அது நடைமுறைப்படுத்தாது விடும்போது, சர்வதேச சமூகம் சிங்களத்தைத் தட்டிக்கேட்டு - தமிழர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்கும் என்றே தமிழ்மக்கள் நம்பினர். ஆனால் அந்த நம்பிக்கை பலிக்கவில்லை. சிங்கள அரசுடன் இருதரப்புப் பேச்சுக்களை நடாத்தினால் என்ன, சர்வதேச அனுசரணையுடன் கூடிய முத்தரப்புப் பேச்சுக்களை நடாத்தினால் என்ன விளைவு ஒன்றாகவே உள்ளது, பூச்சியமாகவே உள்ளது. சர்வதேச நாடுகளையே இவ்விதம் ஏமாற்றி - அவர்கள் முன்னிலையிலேயே இராணுவத் திமிர்காட்டி - சமாதான முயற்சிகளையே அர்த்தமற்ற - வீண்வேலைபோல சிங்களம் காட்டியுள்ளது.

இத்தகைய அரசியற் புறச்சூழலில் தமிழ்மக்கள் ஒரேயொரு செய்தியை பாடமாகப் படித்துள்ளனர். அதாவது, தமிழரின் இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வென்பது இல்லவே இல்லை என்பதுதான் அந்த அரசியல் பாடமாகும். இதைத்தான் தலைவரும் தனது உரையில் கொள்கைப் பிரகடனமாக வெளியிட்டுள்ளார்.

''சிங்களப் பேரினவாதத்தின் கடும்போக்கு தனியரசு என்ற ஒரேயொரு பாதையைத்தான் இன்று தமிழீழ மக்களுக்குத் திறந்துவைத்திருக்கின்றது'' என்று தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழரின் விடுதலைப் பயணத்தின் அடுத்தகட்டம் பற்றியும் தலைவர் தெட்டத்தெளிவாகக் கொள்கை நிலைப்பாடெடுத்து - உலகிற்கு அறிவித்துள்ளார்.

''தமிழீழத் தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் நாம் தீர்க்கமாக முடிவு செய்திருக்கின்றோம்'' என்று பிரகடனப்படுத்தியுள்ளார்.

இந்த தனியரசு நோக்கிய தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு உலகநாடுகள் அங்கீகாரத்தையும் - ஆதரவையும் வழங்க முன்வரவேண்டும் என்றும் தலைவர் அவர்கள் சர்வதேச சமூகத்தையும் கோரியுள்ளார்.

இந்த விடுதலை வேள்விக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்ந்தும் தங்களது பங்களிப்பை வழங்கி - தேசியக் கடமைபுரிய வருமாறும் அழைத்துள்ளார். அதேசமயம் தமிழ்நாட்டு மக்களின் உதவிகளையும் - தார்மீக ஆதரவுகளையும் நன்றியுடன் நினைவுகூர்ந்த தலைவர் அவர்கள் தொடர்ந்தும் அத்தகைய ஆதரவுகளை தமிழரின் தனியரசு அமைக்கும் போராட்டத்திற்கு வழங்கி - வரலாற்றுக் கடமை புரியும்படியும் அம் மக்களைக் கோரியுள்ளார்.

மொத்தத்தில், வரும் புதிய ஆண்டில் தமிழரின் போராட்டம் தீவிரம்பெற்று - தமிழரின் தாயகப் பிரதேசங்களை படிப்படியாக மீட்டு தனியரசு அமைக்கும் இலட்சிய உறுதியுடன் வீறுநடை போடவுள்ளது என்ற தலைவரின் உறுதியுரை அவரது மாவீரர் நாள் உரையின் சாராம்சமாக உள்ளது.

---

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய சூழலிலே எவ்வாறு வியட்நாம் விடை கண்டது? நீண்ட போராட்ட வரலாற்றினையும் குறிப்பாகப் பிரஞ்சு, அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கு எதிராக தொடர்ச்சியான முப்பதுவருடகால விடுதலைப்போரை நடாத்தி எவ்வாறு விடுதலையைப் பெற்றது? அதன் விடுதலை வரலாற்றின் கடைசிப் பக்கங்கள் எவ்வாறிருந்தன? இரு தரப்பிற்குமான முறையான பேச்சுக்கள் பாரிசில் **1968 மே 13ல்** ஆரம்பமாகி, பல்வேறு இழுபறிகள், பாரிய மோதல்களுக்கு மத்தியில் நகர்ந்தன. இறுதியாக ஏதோ ஒரு வழியாக **1973 சனவரி 23ல்** ஒரு உடன்பாடு ஒன்று கைச்சாத்தானது. இருதரப்பிற்கும் திருப்தியற்ற ஒரு அரைகுறைத் தீர்விற்கு இது வழிவகுத்தது. இருதரப்பிற்கும் எவ்வகைகளிலும் திருப்திதராத **இவ் உடன்பாடே முப்பதுவருட வியட்நாமிய போராட்ட வரலாற்றினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது. அமைதி பற்றிய உடன்பாட்டின் பிரகடனத்திற்குப் பின்னரே போரின் இறுதிக் கட்டம் ஆரம்பமானது.** இருதரப்புமே தங்கள் இலக்குகளைக் கைவிடவில்லை. அதை மேலும் வேகப்படுத்தவே இவ் உடன்பாட்டினைப் பயன்படுத்தின. மற்றவர் பிடியில் இருந்த நிலப்பரப்பை பறித்தெடுக்கவே முயன்றன. விடுதலைப்போராட்டத் தரப்போ எதிரிதரப்பு தென் வியட்நாமிற்குள் பெருமளவு ஊடுருவி ஆயுத தளவாடங்களைத் தகர்த்து விநியோகப் பாதைகளை அமைத்து ஆயத்தங்கள் செய்தது. எதிர்த்தரப்பில் குழப்பங்கள் ஏற்பட்டு வாய்ப்பான சூழல் தோன்றியது. 1975 தொடக்கத்தில் இறுதிப்போரை ஆரம்பித்து 45 நாட்களுக்குள் சைகோனை விடுவித்து **வியட்நாம் விடுதலை பெற்றது.**

ஆகவே மகிந்தர் இக் கடைசிக் கால கட்டத்தில் மென்மேலும் தீவிரப்படுத்தும் அனைத்து ஒடுக்குமுறைகளும் எமது வெற்றிக்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தி வேகப்படுத்தவே. இதுவே வரலாற்றின் விசித்திர தீர்ப்பு. இத்தீர்வினை எழுதப்போகும் நாம்

"சலிக்காமல் வழிநடக்கும்
சக்தியினை எமக்கருளும்
செல்லும் வழிகளை
செம்மைப்படுத்தி வையும்
பாய்ச்சல் நிகழ்கையிலேயே
பக்கத்தில் துணையிருந்து
காற்றுச் சங்கூதும்
வெற்றியோடு மீளும்போது
எம்மைப் பெருமைப்படுத்தும்"

(பொன் கணேசமூர்த்தி)

என மாவீரரை வேண்டி நிற்போம்.



www.eelamview.com

www.eelamview.com





# “தீர்ப்பை எழுதும் திடத்தை எங்களுக்கு அருள்வீராக”

**மா**வீரர் ஈகத்தால் மாண்புறும் இக்கார்த்திகை மாதம் தமிழ்மக்கள் முன் இமாலயக் கேள்வியொன்றினை எழுப்பி அதற்கு விடை காணுமாறு பணித்துள்ளது. தமிழர் தேசியமென்பதை பிரகடனப்படுத்தி தமது அரசியல், இராசதந்திர, இராணுவ செல்நெறியை உலகிற்கு தேசியத் தலைவன் வழி பிரகடனப்படுத்தும் எம் மக்கள் தமது முதன்மை நிலைப்பாடொன்றினை இம்முறை உணர்த்த வேண்டியுள்ளது. **இனி இங்கிருந்து எங்கு?** என்கிற இக் கேள்வி மூன்றாம் தடவையும் இறுதியுமாக எம் மக்கள் முன் எழுந்துள்ளது. ஆனால் இம்முறை முன்னைய காலங்களை விட அகன்ற, விரிந்த, ஆழமான பரிமாணத்தில் இக்கேள்வி எழுந்துள்ளது. முன்பு, குடியேற்றவாத ஆட்சிக்கால முடிவில் இனி இங்கிருந்து எங்கு என்றபோது மென்முறை வழியிலான போராட்டப் பாதையைப் பதிலாகக் கண்டவர்கள், 1970களில் மீண்டும் இக்கேள்விக்கு ஆயுதப்போராட்ட வழிமுறையை விடையாகத் தந்தவர்கள் இம்முறை எல்லாவற்றினதும் தொடர்ச்சியாகவும், தொகுப்பாகவும் பாரிய முடிவொன்றினை எடுக்க வேண்டியவராகவுள்ளார்கள்.

**மூன்று பத்தாண்டுகள் கடந்தும் மூன்று வகையான சருவதேச ஒழுங்குகளுக்குள் பயணித்தும் இன்னும் இளமையுடனும் துடிப்புடனும் விடுதலையை அவாவும் வீறுடனும் இயங்கும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம்** இப்பொழுது ஒரு புதிய பாய்ச்சலை வேண்டி நிற்கின்றது. நவசீனத்தின் முதல்வன் மாவோ எழுதியதுபோல, மக்கள் கூட்டமொன்று தனது அடிப்படை அரசியல் சிக்கலைத் தீர்ப்பதற்கு தொடக்கத்தில் மென்முறை வழியிலே பயணிக்கும். அப்போது அப்பாதையின் குறுக்கே பாரிய தடையொன்று தோன்றும். அத்தடையை நீக்க ஆயுதப்போராட்ட வழிமுறையை வரித்து, அத்தடையை தாண்டிப் பயணிக்க வேண்டும். அதுபோலவே எமது விடுதலைப் போராட்டமும் அத்தடையைத் தாண்டி சிங்கள அரசை 2000ஆம் ஆண்டளவில் நிலைகுலையச்செய்து அடுத்த கட்டத்திற்கு நகர முற்படுகையிலே

**மூன்று பத்தாண்டுகள் கடந்தும் மூன்று வகையான சருவதேச ஒழுங்குகளுக்குள் பயணித்தும் இன்னும் இளமையுடனும் துடிப்புடனும் விடுதலையை அவாவும் வீறுடனும் இயங்கும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் இப்பொழுது ஒரு புதிய பாய்ச்சலை வேண்டி நிற்கின்றது.**

எங்கும் நடந்தது போலவே இங்கும் நடந்தது. பல்வேறு மனிதநேய முகமூடிகளை அணிந்து கொண்டு தற்போதைய **உலக ஒழுங்கில் எமது விடுதலைப் போராட்டம் சுயம்புவாக இயங்கி வெல்வதன்வழி ஏற்படும் உடைவுகளை தடுப்பதற்காக** போர்நிறுத்தம் - பேச்சுவார்த்தை - உடன்பாடு - ஆயுதக்களைவு - தேசிய நீரோட்டத்தில் இணைவு - என்கிற சூத்திர அடிப்படையில் சருவதேசம் தலையிட்டது. எல்லாருக்கும் அவரவர் நலன்களே முதன்மையானது. அவரவர் நலன்களுக்கு பங்கமில்லாமல் பாங்காக வழிகாணும் இராசதந்திர நெறிப்படியும் அரசியல் நாகரீகம் பேணியும் புலிகள் இதுவரை இணங்கிச் செயற்பட்டது வரலாறு. இது வரலாற்றின் இயங்கியல் நெறிகளுக்கு முற்றிலும் பொருத்தமானது. அதேபோல இயங்கியல் நெறிகளின் அடிப்படையிலான முரண்பாடுகளை கையாள்வதில் திறன் காட்டும் பிரபாகரன் சருவதேச முரண்பாடுகளையும் கையாள்வதில் காட்டிய தேர்ச்சியின் விளைவே இன்றைய சிறிலங்காவின் சருவதேசத்தின் முன்னாலான தலைகுனிவு நிலை என்பதும் மிக வெளிப்படை.

ஆனால், இக் கட்டம் வரை எல்லாம் சீராக இயங்கியல் விதிப்படி இயங்கின; ஆனால் இதன் பின்?; இப்போது வரலாற்றின் சுழல் சக்கரம் நின்றுவிட்டது; வரலாறு முன்னோக்கி நகராமல் தேங்கி நிற்கிறது; அதுமட்டுமன்றி பின்நோக்கி வரலாறு பயணிக்கிறதோ என்கிற அபத்த நிலையையே மகிந்தரின் ஒரு வருட கால ஆட்சி உருவாக்கியுள்ளது. **மனித உரிமைகள்** பற்றிப் பேசவேண்டிய உலகம் **மனிதாபிமான உதவி பற்றிப்** பேச வேண்டியுள்ளது. ஏ - ஒன்பதையும் ஏ - பதினைந்தையும் பூட்டி மக்களைப் பட்டினி நிலையிலிட்டு சோறா, சுதந்திரமா என்று மகிந்தர் கேட்பது கண்டு உலகம் திக்குமுக்காடுகின்றது. மனிதநேயமுள்ளவர் அனைவருக்குமே தற்போதைய நிலை தாங்க முடியாததாகிவிட்டது. அறிக்கை விடக்கூடிய அனைவருமே கடும் தொனியில் அறிக்கை விட்டாகிவிட்டது. இயற்கைச் சுனாமியிலிருந்து மீழும் வழிகளை மூடுவதன் மூலம் **மனித செயற்கைச் சுனாமி** இங்கு உருவாக்கப்படுகின்றதென என ஐ.நா.வின் மூத்த சிறப்புத் தூதர் எகலண்ட் துயர் தோய்ந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

வரக்கூடிவர்கள் எல்லோரும் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இக் கார்த்திகை மாதத்தின் இறுதிவாரம் எல்லாவகையிலும் முக்கியம் பெறப் போகின்றது. நவம்பர் 27ஆம் திகதியைச் சுற்றி முன் பின்னாக இராசதந்திரச் செயற்பாடுகள் துரித கதியைப் பெறுகின்றன. ஐ.நா.வின் மனித உரிமை ஆணையகத்தின் முக்கிய மாநாட்டில் சிறிலங்காவிற்கெதிரான மனித உரிமை மீறல் கண்டனத் தீர்மானத்தினை முன்வைக்க ஐரோப்பிய ஒன்றியத் தலைமை வகிக்கும் பின்லாந்து தெரிவுசெய்த திகதி நவம்பர் 27. **இந்தியப் பிரதமரும் சொல்ல வேண்டியதைச் சொல்லவேண்டிய முறையில் சொல்லப் போவதாகச் சொல்லிவிட்டார்.** இதுதான் இன்றைய புறச்சூழல். இவை குறித்து ஐயுறவுடனும் அதேவேளை பொறுமையுடனும் எம் மக்கள் அவதானிக்கின்றனர். சாப்படுக்கையில் உழலும் நோயாளியை இறுதி முறை பார்த்து ஆறுதல் கூறிச்செல்லும் பாங்கிலா சர்வதேசமுள்ளது என எம் மக்கள் சிந்திக்கின்றனர்.

- க.வே.பாலகுமாரன் -

கொழும்பில் நிலை என்ன? புலிகள் மீது வசைபாடும் பல்கலைக்கழக ஆசிரியர் என்கிற பெயரில் இயங்கும் அணியொன்று மகிந்தர் முன்னுள்ள தெரிவினை ஒரு கேள்விக் குறியாக்கியுள்ளது. பின்வரும் இரண்டில் எதனை மகிந்தர் தெரிவுசெய்யப்போகின்றார்? அரசியல் நீதி பிழைத்த சட்டம் ஒழுங்கற்ற ஒரு இழிநிலையையா? அல்லது கண்காணிப்புடனான சருவதேச சட்டங்களுக்கு அமைவான நிலையையா? இவ்வாறு பல காத்திரமான கேள்விகள் எழுப்பப்படுகின்றன? கொழும்பின் மேட்டுக்குடி அரசியல்வாதிகளால் தமிழ்மக்கள் படும் துயரை உணரமுடியுமா? ஏ - ஒன்பது பற்றிய முடிவின்றி எதற்காக அரசாங்கத் தரப்பு பேச்சிற்குச் சென்றது? தம் மக்கள் துயர்படும் பொழுது எவ்வாறு புலிகளால் அமைதியாகப் பேசமுடியும்? அறிவாளர் எனக் கூறுவோரால், ஏன் புலிகளைக் கண்டிப்போரால் கூட இக் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இவற்றினை ஒரு கட்டுரையாளர் எழுத்தில் பின்வருமாறு வடிக்கின்றார். **“சிறிலங்கா - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றும் சந்திக்கும் ஒரு மையப்புள்ளியில் நிற்கிறது.** எதிர்காலத்தின் நுட்பமான விளைவுகளை இப்போது எதிர்வு கூற முடியாது. ஆனால் அதன் கருப்பைக்குள் தாராளமான வாய்ப்புக்களும் பேராபத்தான பேரழிவுகளும் உடன் இருப்பதை உணர முடிகின்றது. தோல்வியின் விதைகள் எம்மைச் சுற்றி விதைக்கப்பட்டு அவை வேகமாக வேரூண்டுகின்றன. குழப்ப சக்திகளுக்கு மத்தியிலும் சனாதிபதி மகிந்தர் துணிவான, நேர்மையான முறையில் இனச் சிக்கலைத் தீர்க்க முடிவெடுக்கவேண்டும். ஐ.தே.கட்சியுடனான உடன்பாடு அவருக்கு என்ன செய்ய வேண்டுமோ அதற்கான வாய்ப்பினைக் கொடுக்கின்றது.” இவ்வாறாக அவ் அறிவுரை நிற்கின்றது. இன்னொரு கட்டுரையில் வரலாற்றின் ஒரு உதாரணம் சுட்டிக் காட்டப்படுகின்றது. பாகிஸ்தானிய சனாதிபதி முசாரப் தனது நூலில் (In the line of fire) 52ஆம் பக்கத்தில் இதுபற்றிக் கூறப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. 1970ஆம் ஆண்டளவில் கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட பாரிய சூறாவளி, கடற்கொந்தளிப்பால் இரண்டு லட்சம் மக்கள் கொல்லப்பட்டபோது, பாக். சனாதிபதி யாகியகான் கடைப்பிடித்த மிக மோசமான புறக்கணிப்புப் போக்கின் விளைவே மேற்குப் பாகிஸ்தான் தலைமை தம்மை முற்றிலுமாகப் புறக்கணிக்கின்றது என்று கிழக்கு பாக். மக்கள் முற்றாக முடிவெடுத்து முதிபுர் ரகுமானின் அவாமி லீக் கட்சிக்கு மகத்தான ஆதரவு அளித்தமை. ஆகவே இங்கெழும் கேள்வி கொழும்பின் ஒரு யாகியகான். அதன் விளைவு இன்னொரு பங்களாதேசமா? இவ்வாறு தர்க்கபூர்வமான கேள்விகள் சிங்களத்தில் எழுப்பப்படுகின்றன.

ஆகவே இவ்வளவு விபரமாக இத் தகவல்கள் இங்கு குறிப்பிடப்படுவதற்கு என்ன காரணம்? தமிழ்மக்களாலும் அவர்கள் தலைமையாலும் சொல்லப்படவேண்டியவை சொல்லப்பட்டாகிவிட்டது என்பதுதான். **உரியவர்களுக்கு உரியமுறையில் சொல்லப்படவில்லை என்கிறவாதம் அல்லது பிறர்க்கு உணர்த்துதல் என்கிற ஒரு வரலாற்றின் விதி அல்லது விடிவின் முன்னால் ஒரு நிபந்தனை நிறைவேற்றப்பட்டாகிவிட்டது.** ஆகவே இனி இங்கிருந்து எங்கு என்ற கேள்விக்கு மட்டுமே இனி எம் மக்கள் விடை காணவேண்டியுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

www.eelamview.com






# விடுதலை வீரியம்



மண்ணின் மகனாக — மாவீரனாக

30.03.1973 — 07.10.2006

லெப்.கேணல் விக்ரர் விசேட

கவச எதிர்ப்புப் பிரிவின் தளபதி

**லெப். கேணல் அக்பர்**

(வீரபத்திரன் பேரின்பராசா)

கதிரவெளி, மட்டக்களப்பு.

**வட** போர்முனையின் கட்டளைப் பணியகம். தொலைத்தொடர்புக் கருவி அக்பரைத் தேடுகிறது. தொடர்பு இல்லை. காலையில்தான் முன்னணி நிலைகளைப் பார்த்துவிட்டு, அணித் தலைவர்களைத் தயார்ப் படுத்துவதற்காக பின் தளத்திற்குப் போய் வருவதாகத் தளபதி தீபனிடம் கூறிச் சென்றவன். இன்னமும் வரவில்லை. மாலை 3.00 மணி அக்பரின் தொடர்பில்லை. மாலை 5.00 மணி தொடர்பில்லை. இரவு 8.00 மணி தொடர்பில்லை. தளபதியின் மனதில் சந்தேகம் தோன்றுகின்றது. நாளை விடிந்தால் எதிரி முன்னேறக்கூடும் என்ற தருணத்தில் அக்பர் ஒருபோதும் இத்தனை மணிநேரம் தொடர்பில்லாமல் நிற்கமாட்டான். நேரம் செல்லச் செல்ல தளபதியிடமும் ஏனைய போராளிகளிடமும் ஏக்கம் தொற்றிக்கொள்கிறது. அவனுக்கு ஏதும் நடந்துவிட்டதா? அவனை எப்படித்தான் நாம் இழக்கமுடியும்? எல்லோரும் அவனைத் தேடினார்கள். அவன் எத்தனை பெறுமதிக்குரிய வீரன். களங்களில் அவன் சாதித்தவைகள்தான் எத்தனை. நாளைக்கும் அவன் வேண்டுமல்லவா? அவன் எங்கே போய்விட்டான்?

அக்பர் பிறந்தது தவழ்ந்தது வளர்ந்தது எல்லாமே மட்டக்களப்பின் கதிரவெளியில்தான். போராட்டத்திற்கும் அவன் குடும்பத்திற்கும் நெருங்கிய ஒன்றிப்பிருந்தது. அண்ணன் அப்போது போராளியாய் இருந்தான். இந்திய இராணுவம் ஊருக்குள் நுழைந்து வீடுவீடாய்ப் புகுந்து இளைஞர்களை வீதிக்கு இழுத்துச் சித்திரவதை செய்தது. இந்த அவலங்களுக்கு அக்பரும் விதிவிலக்காகவில்லை. அவனை வீட்டிற்குள் வந்து இழுத்து வெளியே தள்ளினார்கள். ஜீப்பில் ஏற்றி முகாமிற்குக் கொண்டு போய்க் கட்டிவைத்துச் சித்திரவதை செய்தார்கள். அண்ணன் போராளியாய் இருந்ததைச் சொல்லி அவனை அவமானப்படுத்தினார்கள். இந்தத் தாக்கங்கள்தான் அவனையும் போராளியாக்கியது. 1990ஆம் ஆண்டில் வன்னிக்கு வந்த அவன் அடிப்படைப் பயிற்சிகளை மணலாறில் பெற்றதோடு அவனின் நீண்ட போராட்டவாழ்வு முளைவிடுகின்றது.

பல இரகசியப் பணிகளிலும் கடுமையான பயிற்சிகளிலும் ஈடுபட்ட அவன், சிறிய சிறிய சண்டைகளிலும் பங்குகொண்டு தன்னை ஒரு சிறந்த போர்வீரனாக வளர்த்துக்கொண்டான். அக்பரின் இந்த வளர்ச்சித்திறன் சூரியக்கதிர் நடவடிக்கையின்போது முழுமையாய்த் தெரிந்தது. முன்னேறிவரும் எதிரியைத் தடுத்து நிறுத்தித் தாக்குதல் செய்வதற்கான வேவு நடவடிக்கைகளில் துணிச்சலாக ஈடுபட்டான். அவன் பார்த்த வேவுகளின்படி தாக்குதல்களும் நடந்தது. ஒரு சாதாரண போராளியாய்ச் சண்டைக் களங்களைச் சந்தித்த அவன், வேவு அணிகளை வழிநடத்தும் அணித் தலைவனாக வளர்ந்தான். இந்த நாட்களில்தான் முல்லைத்தீவிலிருந்த இராணுவத்தின் படைத்தளம் மீது ஓயாத அலைகள் - 01 என்ற பெயரில் பாரிய படைநடவடிக்கையைத் தலைவர் அவர்கள் திட்டமிட்டுத் தயார்ப்படுத்தினார். இந்தத் தாக்குதலுக்கு இம்ரான் பாண்டியன் படையணியின் முறியடிப்பு அணியின் பற்றாலியன் உதவிக் கட்டளை அதிகாரியாக அக்பர் நியமிக்கப்பட்டான். எதிரி நினைத்திராத பொழுதில் முல்லைத்தீவுத் தளத்தில் அடிவிழுந்தபோது சிங்களம் திகைத்தது. யாழ்ப்பாண ஆக்கிரமிப்பிற்குப் பலமாய் நிற்கும் முல்லைத்தீவுத் தளத்தை இழக்கவிரும்பாமல் கடைசிவரை அதைத் தக்கவைக்க கடும் முயற்சி செய்வார்கள் என்பது தலைவருக்கு நன்கு தெரியும். முல்லைத்தீவுப் படைகளைக் காப்பாற்ற சிங்களப்படை தரையிறக்கம் ஒன்றைச் செய்யும் என்பதை உய்த்தறிந்த தலைவர் அவர்கள், அணிகளைத் தயாராய் வைத்திருந்தார். எதிர்பார்த்தபடி அளம்பிலில் சிங்களப்படை வந்து தரையிறங்கியது. ஒரு தன்மானப்போர் அங்கே நடந்தது. கட்டளை வழங்கும் தளபதியாய் இருந்த அக்பர் சண்டை இறுக்கம் அடைந்தபோது தானும் களத்திற்குள் புகுந்துவிட்டான். திறமையாய் அணியை வழிநடத்தினான். அளம்பில் மண்ணில் எதிரியைக் கொன்றுபோட்டான். முல்லைத்தீவுச் சமர் முடிந்து ஓயாத அலைகள் - 01 நடவடிக்கை வெற்றிவாகை சூடியபோது, அக்பர் ஒரு சிறந்த சண்டைக்காரனாக வெளிப்பட்டான்.

முல்லைத்தீவில் அடிவாங்கிய சிங்களப்படை, தங்கள் அவமானச் சின்னங்களை இல்லாமல் செய்வதற்காக 'சத்ஜெய' என்ற பெயரில் கிளிநொச்சியை ஆக்கிரமிக்கும் படை நடவடிக்கையை ஆரம்பித்தது. பரந்தனில் சிங்களப் படைகளை எதிர்கொண்ட புலி வீரர்கள் கடும் சமர்புரிந்தார்கள். சிங்களப்படை டாங்கிகள் சகிதம் எங்கள் பகுதிகளுக்குள் புகுந்து கொண்டிருந்தது. சண்டை நடந்த இடத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்த அக்பர், சண்டையின் இறுக்க நிலையைப் புரிந்து கொண்டு உடனே சண்டை நடந்த இடத்தை நோக்கி ஓடினான். உடனடியாக முடிவெடுத்து அங்கு நின்ற ஆர்.பி.ஜி உந்துகணை செலுத்தி வைத்திருந்த மூன்று வீரர்களை ஒன்றாக்கி முன்னேறிவந்த டாங்கிகள் மீது ஒரு துணிச்சலான தாக்குதலை மேற்கொண்டான். இந்தத் தாக்குதலில் இரண்டு டாங்கிகள் எரிந்து அழிந்தது. இக்கட்டான ஒரு சூழ்நிலையில் அக்பரின் விரைவானதும் நுட்பமானதுமான இந்தத் திட்டம் வெற்றிகரமாய் நிறைவேறியது. அன்றைய நாளில் எதிரியின் முன்னேற்ற முயற்சியைத் தடுத்து நிறுத்தியதில் அக்பர் முக்கிய காரணமாய் இருந்தான்.

**– ச.புரட்சிமாறன் –**

ஏ - 9 வீதியைப் பிடித்து யாழ்ப்பாணத் திற்குத் தரைவழிப் பாதையைத் திறக்கும் பாரிய நில ஆக்கிரமிப்பிற்கு ரத்வத்தவின் பேரிகை முழக்கத்தோடு, தொடங்கப் போகும் 'ஜயசிக்குறு' படைநடவடிக்கையை முறியடிக்கும் திட்டத்தில் தலைவர் அவர்கள் அதிக நேரத்தைச் செலவிட்டார். டாங்கிகளை எதிரி அதிகம் பயன்படுத்துவான் என்பதையும் தலைவர் புரிந்துகொண்டார். இந்த டாங்கிகளைச் சிதைப்பதற்காக ஒரு படையணியை உருவாக்குவதற்கு முடிவெடுத்து அதற்கான கட்டளைத் தளபதியாக யாரைத் தெரிவு செய்யலாம் எனத் தேடியபோது அதற்குப் பொருத்தமானவனாய்த் தலைவரின் கண்ணுக்குள் தோன்றியது அக்பரின் முகம்தான். சத்ஜெய முறியடிப்புச் சமரில் அக்பரின் திறமையினைத் தலைவர் அவர்கள் இனம் கண்டுகொண்டார். அக்பரின் தலைமையின்கீழ் இம்ரான் பாண்டியன் படையணியின் சிறப்புப் பயிற்சிபெற்ற போராளிகள் விக்டர் விசேட கவச எதிர்ப்பு அணியாக உருவாகினர். இந்தப் படையணியில் நுழைந்த அனைவருக்கும் கடும் பயிற்சி. அக்பரில் தொடங்கி சாதாரண போராளி வரைக்கும் எல்லோரும் பயிற்சியெடுத்துத் தேர்வின்போது சித்தியெய்திய பின்னரே இந்த அணிக்குள் நுழைந்தனர். அக்பர் ஒரு கட்டளை அதிகாரியாய் இருந்தபோதும் ஒவ்வொரு போராளிக்குமுரிய எல்லாக் கடமையையும் தானும் நிறைவேற்றினான். ஒவ்வொரு சின்னச் சின்ன விடயங்களிலும் கவனமெடுத்தான். போராளிகளுக்கும் தனக்குமான இடைவெளியைக் குறைத்து ஒரு நெருக்கமான, இறுக்கமான உறவை ஏற்படுத்தினான். எல்லாக் கடின பயிற்சிகளிலும் தானும் ஈடுபட்டபடி மற்றப் போராளிகளையும் உற்சாகப்படுத்துவான். பயிற்சித் தேர்வின்போது எந்தப் போராளியும் சித்தியெய்தாமல் விடக்கூடாது என்பது அவனது நோக்கமாய் இருந்தது. அப்படித் தேர்வில் சித்தியெய்தத் தவறியவர்களை மீண்டும் மீண்டும் பயிற்சியில் ஈடுபடுத்திச் சித்தியெய்த வைத்தான்.

பயிற்சியுடன் மட்டும் நின்றுவிடாமல் போராளிகளுக்கு உணவு கொடுப்பதைக்கூட தானே நேரில் நின்று உறுதிப்படுத்திக் கொள்வான். ஒருமுறை மதியவேளையில் போராளிகளுக்குக் கொடுக்கும் பசுப்பாலைக் காய்ச்சும்போது எரித்துவிட்டார்கள். அதன்பின், தான் நிற்கும் நேரங்களில் தானே பால் காய்ச்சி போராளிகளுக்குக் கொடுப்பான். போராளிகள் தவறிழைத்தால் அல்லது அலட்சியமாகச் செயற்பட்டால் அவன் எடுக்கும் நடவடிக்கை போராளிகள் எதிர்காலத்தில் எச் சந்தர்ப்பத்திலும் அத்தகைய தவறுகளை விடாதபடி படிப்பினை மிக்கதாய் இருக்கும். ஒருநாள் போராளிகள் கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்தார்கள். அக்பரும் குளிப்பதற்காக கிணற்றடிக்கு வந்தான். அந்தச் சூழலை அவன் மேலோட்டமாய்ப் பார்த்தபோது அன்று காலையில் கிணற்றடி சுத்தம் செய்யப்படாமல் பாவித்த பொருட்களின் தடயங்கள் அப்படியே கிடந்தது. அக்பர் ஒன்றும் பேசவில்லை. யாரையும் குறைகூறவுமில்லை. விடுதியில்போய் விளக்குமாறினை எடுத்துக்கொண்டுவந்து தானே கிணற்றடியைச் சுத்தப்படுத்தினான். போராளிகள் அப்பொழுதுதான் விழித்துக் கொண்டவர்களாய் விளக்குமாறினை வாங்கிச் சுத்தப்படுத்த முனைந்தார்கள். அக்பர் யாரையும் அதற்கு அனுமதிக்கவில்லை. அன்றைய நாளில் அந்தப் பகுதியை முழுமையாய் தானே சுத்தப்படுத்தினான். அதன் பின்புகூட அவன் அதைப்பற்றி யாரிடமும் எதுவும் பேசவில்லை. அக்பரின் இந்தச் செயற்பாடு போராளிகளின் விழிகளைக் கசியச்செய்தது. அதன்பின் ஒருபோதும் அந்தத் தவறைப் போராளிகள் விட்டதில்லை. அக்பரின் இந்தப் பண்பும் தவறிழைத்தவர்களைக் கூட யாரிலும் நோகாமல் தன்னைமட்டுமே வருத்தி அதற்குத் தீர்வு காணும் திறனும் போராளிகளிடத்து ஒரு தந்தைக்குரிய நிலையை அவனுக்குப் பெற்றுக்கொடுத்தது. அக்பர் விளக்குமாறு பிடிப்பதில் மட்டுமல்ல களத்திலே ஆயுதம் பிடித்துச் சுடுவதுவரை இதே முடிவைத்தான் கடைப்பிடித்தான். அக்பரின் உச்சமான வளர்ச்சிகளுக்கு இதுவே அடிநாதமாய் இருந்தது.

நீண்ட எதிர்பார்ப்புகளோடு தலைவர் இந்த அணியை உருவாக்கினார். 1997ஆம் ஆண்டு வைகாசி 13ஆம் திகதி. புத்தபிரான் முன் சபதம் எடுத்துக்கொண்டு வன்னி மீது 'ஜயசிக்குறு' என்ற பெயரில் பாரிய இராணுவ நடவடிக்கையை சிங்களம் தொடங்கியது. தயாராய் இருந்த விடுதலைப்புலிகளின் படையணிகள் களத்திலே எதிரியை நேருக்குநேர் எதிர்கொண்டனர். மனோபலத்திலே எங்களுக்குக் கீழே நின்ற எதிரி ஆயுதபலத்தில் எங்களுக்கு மேலே நின்றான். சண்டைகளின் போது டாங்கிகளை முன்னணிக்கு அனுப்பி டாங்கிகளின் சுடுகுழல்களால் எங்கள் காப்பரண்களைச் சல்லடைபோட்டுக்கொண்டு அந்த இரும்புக் கவசங்களின் மறைவில் பதுங்கிப் பதுங்கி எங்கள் பகுதிகளுக்குள் நுழைந்தனர். இந்தச் சூழலை எதிர்பார்த்து அதற்கென்றே தயாராய் இருந்த அக்பரின் அணி, களத்தை நேரடியாய்த் தரிசித்தது. எதிரி ஒவ்வொரு அடி நிலத்தையும் ஆக்கிரமிப்பதற்கு அதிகவிலை கொடுத்தான்.

25.05.1997 மன்னகுளத்தில் ஒரு கடுமையான முறியடிப்புச் சமரை எங்களது படையணிகள் நடாத்தின. டாங்கிகள் பரவலாய் முன்நகர்ந்தன. அக்பர் கட்டளை வழங்கும் காப்பரணில் நின்றபடி ஆர்.பி.ஜி ஏந்திய தனது போராளிகளை வழிநடத்திக்கொண்டிருந்தான். போராளிகள் எதிரியுடன் நெருங்கிநின்று சண்டையிட்டனர். சண்டை உச்சமடைந்து கைகலப்புச் சண்டையாக மாறியது. இந்த வேளையில்தான் ஆர்.பி.ஜி கொமாண்டோ வீரன் பாபு வீரச்சாவடைந்த செய்தி அக்பரின் காதிற்கு எட்டுகின்றது. அக்பரின் இரத்த நாளங்களில் துடிப்பு அதிகரிக்கின்றது. எத்தனை பாசமாய் அவன் வளர்த்த வீரர்கள் மடிந்துகொண்டிருந்த போது அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. நேரே சண்டை நடந்த இடத்திற்கு ஓடினான். எதிரிமீதான அவனின் ஆவேசம் அங்கு வீழ்ந்துவெடிக்கும் எறிகணைகளின் தாக்கத்திலும் மேலானதாய் இருந்தது. ஒரு கட்டளை அதிகாரியான அக்பர் களத்திலே தான் வளர்த்தவர்களின் அருகில் நின்றபடி, பாடசாலை வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசானைப்போல் களத்திலே சீறிப்பாய்ந்து செல்லும் ரவைகளுக்குள் நெருப்புத் துண்டங்களாய் உடலைக் கிழித்தெறியத் துடிக்கும் எறிகணைத் துண்டங்களையும் அலட்சியம் செய்தபடி டாங்கிகளைச் சிதறடிக்

(09ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com



# சர்வதேச அபிப்பிராயத்திற்கு சிங்கள அரசு இடங்கொடுக்கவில்லை



**நோர்வேயும் இணைத்தலைமை நாடுகளும் எதை எதைச் செய்யவேண்டாம் என்று சிங்கள அரசைப் பார்த்து வலியுறுத்துகின்றதோ! அவற்றை மகிந்த அரசு தொடர்ச்சியாகச் செய்துகொண்டுதான் இருக்கின்றது.**

இனப்பிரச்சினை தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கும் கண்டனங்களுக்கும் மகிந்த அரசு பணிந்துகொடுக்குமா? என்ற வினா பலமானமுறையில் எழுப்பப்படுகின்றது.

நோர்வே அனுசரணை - இணைத்தலைமை நாடுகளின் பங்குபற்றல் என்ற வகையில் இலங்கையின் இனப்பிரச்சினை சர்வதேச விவகாரமாகிவிட்டது.

ஜெனீவா - II பேச்சுக்கு சர்வதேச செய்திநிறுவனங்கள் அளித்த முக்கியத்துவம் பாரியது. பேச்சுக்கள் ஜெனீவாவில் நடந்தபோது இணைத்தலைமை நாடுகளின் பெரும்பாலான பிரதிநிதிகள் கொம்பில் தங்கிநின்றனர்.

'இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேச அக்கறை அதிகரித்துவிட்டது' என்று ஊடகங்கள் இதற்கு வியாக்கியானம் செய்தன.

பேச்சு தோல்வியில் முடிந்தபின் புலிகள் பிரதிநிதிகள் கொழும்பு திரும்பியபோது இந்த இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

திடீரென இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கிளிநொச்சிக்கும் - கொழும்பிற்கும் பயணம் வந்தபோதும் சர்வதேச அக்கறை பற்றிய கதை மீண்டும் வலுவடைந்தது. இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயரின் பிரதிநிதி என்று இவருக்கு கொழும்பு ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

ஜெனீவா - II பேச்சு தோல்விக்கு சிங்கள அரசே காரணம் என்ற உண்மையை சர்வதேசம் ஒப்புக்கொண்டுள்ளது. ஆறு இலட்சம் மக்களுக்கான தரைவழிப் பாதையைத் திறந்து அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டுசெல்வதை அனுமதிக்க சிங்கள அரசு மறுத்ததால் சர்வதேச சமூகம் சற்று சீற்றமடைந்தது என்றே சொல்லலாம்.

A-9 பாதைக்கு மாற்றுப்பாதை என்ற பெயரில் பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையை சிங்கள அரசே சிபாரிசு செய்தது. அந்தப் பாதையை நேரடியாகப் பார்த்து - பாதைதிறப்பு ஒழுங்குகளைக் கவனிக்கவென்ற எண்ணத்துடன், முன் அனுமதிபெற்று அப்பகுதிக்குச் சென்ற கண்காணிப்புக்குழுத் தலைவர், படையினரின் ஆட்லறித் தாக்குதலுக்குள்ளாகிய அதிர்ச்சிச் செய்திகள் வெளியானபோது நோர்வே கடும் சீற்றமடைந்தது. படையினரை விமர்சித்து ஒரு கண்டன அறிக்கையை நோர்வே தலைநகரில் வைத்து திரு.சொல்ஹெய்ம் வெளியிடும் அளவுக்கு நிலைமை இருந்தது.

வாகரை அகதிமுகாம் மீது சிங்கள இராணுவம் ஆட்லறித் தாக்குதலை நடாத்தி 50ற்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்றபோது, இந்தப் படுகொலைத் தாக்குதலை சிங்களத் தளபதி நியாயப்படுத்த முயன்றபோது, இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் குறுக்குக் கேள்விகள் கேட்டு இராணுவத் தளபதியை வாயடைக்கச் செய்தார் என்று கொழும்பில் இருந்து செய்திகள் கசியும் அளவுக்கு நோர்வே பிரதிநிதிகள் கோபங் கொண்டிருந்தனர்.

வாகரை அகதிமுகாம் படுகொலைக்கு விசாரணைக் கமிசன் நியமிக்கும்படி அமெரிக்க அரசு கேட்கும் அளவுக்கு சிங்களப் படைகளின் அட்டூழியங்கள் சர்வதேசத்தைக் கோபங்கொள்ளச் செய்தன.

வலிந்த தாக்குதலை நிறுத்தும்படியும் - போர்நிறுத்த ஒப்பந்தத்தைப்பேண நடவடிக்கை எடுக்கும்படியும் - யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதையைத் திறந்துவிடும்படியும் இணைத்தலைமை நாடுகள் சிங்கள அரசைக் கோரியுள்ளன.

தமிழர் படுகொலையையிட்டு தமிழ்நாட்டு மக்களின் கோபத்திற்கும் - கொந்தளிப்பிற்கும் செவிசாய்த்து மகிந்த அரசைத் தட்டிக்கேட்க இந்திய மத்திய அரசும் முயன்றுள்ளது. பெரும்பாலான இந்திய ஊடகங்கள் சிங்கள அரசைக் கண்டித்து தமிழருக்கு எதிரான அதன் கடும்போக்கை விமர்சித்து காட்டமான செய்திகளை - கட்டுரைகளை வெளியிட்டுவருகின்றன.

ஆனாலும், சர்வதேச நாடுகளின் இந்தக் கண்டனங்களும் அழுத்தங்களும் எதைச் சாதித்துள்ளன? என்ற கேள்வி அவநம்பிக்கையுடன் எழுப்பப்படுகின்றது.

இந்த வெற்றுக் கண்டனங்களையும் - அழுத்தங்களையும் மகிந்த அரசு ஒரு பொருட்டாக மதித்ததாகத் தெரியவில்லை.

நோர்வேயும் இணைத்தலைமை நாடுகளும் எதை எதைச் செய்யவேண்டாம் என்று சிங்கள அரசைப் பார்த்து வலியுறுத்துகின்றதோ! அவற்றை மகிந்த அரசு தொடர்ச்சியாகச் செய்துகொண்டுதான் இருக்கின்றது.

மக்கள் படுகொலைகளிலும் - வலிந்த தாக்குதல்களிலும் - வான்தாக்குதல்களிலும் - அரசியல் படுகொலைகளிலும் சர்வதேச சமூகம் எரிச்சலடையும் அளவுக்கு சிங்கள அரசு கடுமைகாட்டி வருகின்றது.

**- எல்லாளன் -**

எனினும், பயன்தரத்தக்க மாற்றுவழிகளை சிங்கள அரசுமீது தொடுத்து அதன் போர்வெறியை - கடும்போக்கை முறியடிக்க இன்றுவரை நோர்வே அரசோ, இணைத்தலைமை நாடுகளோ முன்வரவில்லை.

சிங்கள அரசின் போர்வெறிக்கு ஆதாரமாயுள்ள வெளிநாட்டுப் பொருளாதார உதவிகளை நிறுத்தி - அதனை வழிக்குக் கொண்டுவரவும் சர்வதேச நாடுகள் முயலவில்லை.

சமாதானம் - பேச்சுவார்த்தை என்று சர்வதேச சமூகம் வெற்றுவார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருக்கும்போது, சிங்கள அரசு, சமாதானத்தைக் குழிதோண்டி ஆழப்புதைக்கும் அரசியல் சூழ்ச்சிகளில் தீவிரமாக ஈடுபட்டபடியுள்ளது.

தமிழர் தாயகத்தை வடக்கென்றும் - கிழக்கென்றும் பிரித்தறுத்துத் துண்டாடி தமிழரின் தாயகக் கோட்பாட்டை சிதைக்க சிங்களம் சதிசெய்கின்றது. நீதிமன்றத் தீர்ப்பு என்று கூறிக்கொண்டு பேரினவாதிகளின் சூழ்ச்சி அரங்கேறுகின்றது. சமாதானத்திற்கு நிரந்தரமாகவே சாவுமணியடிக்கக்கூடிய இந்த சூழ்ச்சிச் செயற்பாட்டை சர்வதேச சமூகம் கண்டுகொள்ளவில்லை. அதைக் கண்டித்து சிங்கள அரசை தட்டிக்கேட்கவுமில்லை.

பேச்சுவார்த்தை மேசைகளில் சர்வதேச நாடுகளிடமிருந்து தப்பிக்கொள்வதற்காக மகிந்த அரசு ஒரு 'ஜனநாயக' நாடகத்தையும் வெற்றிகரமாக நடாத்திவருகின்றது.

"அனைத்துக்கட்சிகளும் இணைந்து - ஒரு தீர்வுத்திட்டம் பற்றி ஒரு உடன்பாட்டிற்கு வரும்'' என்று சாத்தியமற்ற ஒரு கோஷத்தையும் மகிந்த அரசு பயன்படுத்திவருகின்றது. இந்த அரசியல் நாடகத்தையும் சர்வதேச நாடுகள் அமைதியாகப் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றன.

தமிழரின் படுகொலைகளை விசாரிக்கவென 1983ஆம் ஆண்டிலிருந்து சிங்கள அரசு விசாரணைக் கமிசன்களை நியமித்துவந்துள்ளது. அவற்றால் இதுவரை தமிழர் கண்ட பயன் என்ன!

இலங்கைத்தீவின் நீதிவரலாறு இப்படியிருக்க சிங்களப்படைகளின் படுகொலைகளுக்கு விசாரணைக் கமிசன் நியமிக்கப்படவேண்டும் - குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று சிங்கள அரசிடமே, சர்வதேச நாடுகள் கோரிக்கை வைப்பது வேடிக்கையாக உள்ளது.

சர்வதேச மத்தியத்துவத்துடன் பேச்சுக்கள் தொடங்கியபோது தமிழ்மக்கள் மகிழ்ச்சியடைந்திருந்தனர் என்பதுடன் எதிர்காலம் பற்றி நம்பிக்கையும் கொண்டிருந்தனர். ஐம்பதாண்டுகால சிங்கள அரசின் ஏமாற்று அரசியலுக்கு சர்வதேச மத்தியத்துவம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் என்று தமிழர்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால், தமிழ்மக்கள் எதிர்பார்த்தபடி எதுவுமே நடைபெறவில்லை. சிங்கள அரசின் ஏமாற்று அரசியல் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. தமிழருக்கு எதிரான இனவெறி - கொலைவெறி அதிகரித்தபடியே செல்கின்றது. இவற்றையெல்லாம் அருகிலிருந்து பார்த்தபடியே சர்வதேச நாடுகளும் அறிக்கை அரசியல் செய்தபடியுள்ளன.

இவையெல்லாம் தமிழ்மக்களுக்கு ஒரு அரசியல் பாடத்தைச் சொல்லுகின்றன. தமிழரின் விடுதலையைத் தமிழர்தான் போராடிப் பெறவேண்டும். இதுதான் ஈழத்தமிழரின் அரசியல் தலைவிதி என்ற உண்மையை எமது மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

**சிங்கள அரசின் அடங்காப் போக்கையும் - தமிழரின் அவல வாழ்க்கையையும் உலகநாடுகள், இப்போது படிப்படியாகப் புரிந்துவருகின்றன என்பதும் உண்மைதான். இந்தப் புறச்சூழலை நாம் பலப்படுத்திக்கொண்டு எமது நிலமீட்புப்போரை விரிவாக்கி - சிங்களப் படைகளை எமது தாயக மண்ணிலிருந்து விரட்டியடிப்பதன் மூலம்தான் எமது விடுதலையைப் பெறமுடியும். தமிழரின் படைபலம்தான் தமிழருக்கு வாழ்வுகொடுக்கும் என்ற சிந்தனைதான் தமிழரது விடுதலைப்போராட்டத்தின் தாரக மந்திரமாகும்.**

சிங்கள அரசின் அடங்காப் போக்கையும் - தமிழரின் அவல வாழ்க்கையையும் உலகநாடுகள், இப்போது படிப்படியாகப் புரிந்துவருகின்றன என்பதும் உண்மைதான். இந்தப் புறச்சூழலை நாம் பலப்படுத்திக்கொண்டு எமது நிலமீட்புப்போரை விரிவாக்கி - சிங்களப் படைகளை எமது தாயக மண்ணிலிருந்து விரட்டியடிப்பதன் மூலம்தான் எமது விடுதலையைப் பெறமுடியும். தமிழரின் படைபலம்தான் தமிழருக்கு வாழ்வுகொடுக்கும் என்ற சிந்தனைதான் தமிழரது விடுதலைப்போராட்டத்தின் தாரக மந்திரமாகும்.



www.eelamview.com

*"தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத் தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான். அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுகாலமாகத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்"*

**– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்**




# மனித வரலாறும் நினைவுச் சின்னங்களும்

**களத்தில் வீழ்ந்த எதிரிநாட்டுப் படையினருக்குப் பூரண இராணுவமரியாதை அளிப்பதும், உடலைப் பக்குவமாக அவன் நாட்டிற்கு அனுப்பிவைப்பதும் உலகின் போரியல் மரபு. அதே போல் ஒரு நாட்டை ஆக்கிரமிக்கும் இராணுவம் அங்கிருக்கும் இடு நிலங்களையும் போர் வீரர்களின் கல்லறைகளையும் குறை விடாது பாதுகாக்கவேண்டிய பொறுப்புடையதாகும்.**

புவி வரலாற்றோடு ஒப்பிடுகையில் தனி மனித ஆயுட்காலம் ஒரு நொடிப் பொழுதிற்குச் சமமானது. இருப்பினும் இக்குறுகிய காலத் திற்குள் அவன் நாட்டிய சாதனை களும் படைத்த ஆக்கங்களும் காலத்தை வென்று நிற்கின்றன. அவை மனித வரலாற்று நிலையைக் கடந்து புவி வரலாறாக இடம்பெறு கின்றன. மனிதன் ஆக்கியவை இரு வகைப் படுகின்றன. ஒன்று அவன் தனித்தோ கூட்டாகவோ தனது வாழ்நாளில் உருவாக்கியவை. இரண்டு அவன் இல்லாக் காலத்தில் அவன் நினைவாகப் பிறர் உருவாக் கியவை. புவியில் பரந்து பட்டுச் செறிந்து காணப்படும் மனித ஆக்கச் சான்றுகள் இவ்விரு தலைப்பின் கீழ் ஆய்வு செய்யப்படுகின்றன. முன்னைய மனிதன் கட்டிய பல வழிபாட்டுத் தலங்கள், அரண்மனை கள், நிர்வாக மையங்கள், கல்ல றைகள், நினைவுத் தூபிகள் போன்றவை இன்றும் நிலைத்து நிற்கின்றன. அதே போல் அவன் படைத்த இலக்கியங்கள், தீட்டிய ஓவியங்கள், செதுக்கிய சிற்பங்கள் மற்றும் இன்னோரன்ன கைவினைப் பொருள்கள் மனித ஆக்கத் திறனுக்குச் சான்று பகர்ந்தவாறு நிலை பெறுகின்றன. ஆக்கங்களுக்கான மூலப்பொருள்களை மனிதன் களிமண், கல், சுதை, உலோகம், மரம் ஆகியவற்றிலிருந்து பெற்றுள்ளான்.

கிறிஸ்து சகாப்தத்திற்கு முந்திய புராதன காலத்தில் வாழ்ந்த மனிதன் உரு வாக்கிய அதிசயங்கள் ஏழு என்று வழமை யாகப் பட்டியலிடப்படுகிறது. அவற்றுள் ஒன்றுமாத்திரம் இன்றும் நிலைத்து நிற் கிறது. ஏனையவை அழிந்துவிட்டன. கீசா பிரமிட் (GIZA PYRAMID)என்று அழைக் கப்படும் இப் பிரமாண்ட அமைப்பு எகிப்து மன்னன் கூபூ (KHUFU) வின் கல்லறை யாகக் கட்டப்பட்டது. இற்றைக்கு 5000 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட இப் பிரமிட் உலகின் மிகப் பெரிய கல்லறை என்று சிறப்பிக்கப்படுகிறது. பிரமிட் என்பது சதுர வடிவிலான அடித்தளத்தில் நான்கு பக்கமும் முக்கோணமாக உயர்ந்து உச்சியில் ஒன்று சேரும் உருவ முடையது. இப்பிரமிட்டின் அடித்தளம் 13 ஏக்கராகும். 2,500,000 நன்கு வெட்டிச் செதுக்கப்பட்ட கற்கள் இதற்குப் பயன்படுத் தப்பட்டன. இதன் உயரம் 451அடி. ஒவ் வொரு கல்லின் எடை இரண்டரைத் தொன். எகிப்தின் கீசா என்ற இடத்தில் இருப்பதால் அது கீசா பிரமிட் எனப்படுகிறது.

அடுத்த அதிசயம் பபிலோனின் தொங்கு தோட்டம் (THE HANGING GARDENS OF BABYLON)என்று அழைக் கப்பட்டது. 2,500 வருடங்களுக்கு முன்பு இரண்டாம் நெபுட்சாட்நெசர் மன்னன் (NEBUDCHADNEZZAR - II) தனது இளம் மனைவியின் மகிழ்ச்சிக்காக இதை அமைத்தார். யூபிரேட்டிஸ் நதியோரத்தில் 350 அடி உயர மண் குன்றை எழுப்பி அதில் வெட்டிய படிக்கட்டுகளில் ஒரு பூந்தோட்டத்தை உருவாக்கி அதற்கான நீர்ப்பாசன வசதியையும் செய்வித்தான். காலப்போக்கில் இத்தோட்டம் முற்றாக அழிந்துவிட்டது. ஆனால் 1920 இல் ஜேர்மன் புதைபடிவ ஆய்வாளர் றொபேட் கோல்டேவே (ROBERT KOLDEWEY) தோட்டம் இருந்த இடத்தை அடையாளம் கண்டுள்ளார்.

கிறித்தவத்திற்கு முந்திய கிரேக்க மதத்தின் முழுமுதற் கடவுளர் சொயிசின் (ZEUS) 40அடி உயரமான சிலை கி.மு 456இல் கிரேக்க நாட்டின் ஒலிம்பஸ் என்னும் இடத்தில் நிறுவப்பட்டது. மரத்தால் செய்யப்பட்ட இச்சிலை தங்கத் தகடுகளால் போர்த்தப்பட்டது, வைரக் கற்களால் அணி செய்யப்பட்டது. கி.பி475 இல் பெருந் தீயினால் பாதிக்கப்பட்டு அழிந்துவிட்டது. சிலையின் அடிப்பாகம் ஒலிம்பிக் விளை யாட்டுப் போட்டிகள் நடக்கும் திடலுக்கு அருகாமையில் காணப்படுகிறது. இன்றைய துருக்கி நாட்டின் கரையோரத்தில் வேட்டைக்காரர்கள், காட்டுவாசிகள், கன்னிப் பெண்கள் ஆகியோரின் காவல் தெய்வமான டயானாவின் கோயில் கி.மு. நாலாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இப் பெண் தெய்வத்தின் அணிகலன்களாகப் பெருமளவு தங்க, வைர நகைகள் சாற்றப் பட்டிருந்தன. புராதன உலகின் நான்காவது அதிசயமான டயானாவின் கோயில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

மத்தியதரைக் கடலின் ஒரு பகுதி யான ஏஜியன் (AEGEANSEN)கடலிலுள்ள றோட்ஸ் (RHODES) தீவின் துறைமுகத் தில் 100 அடி உயரமான வெண்கலச் சிலை சூரியக் கடவுளுக்கு கி.மு 280 இல் எழுப்பப்பட்டது. இது 56 வருடங்கள் மாத் திரம் தனது பீடத்தில் நின்றது. கி.மு.224 இல் நிகழ்ந்த நில நடுக்கத்தின் போது அது தரையில் வீழ்ந்தது. பல நூற்றாண்டு காலமாக அப்படியே கிடந்த சிலையை கி.பி.7ஆம் நூற்றாண்டில் உலோக வர்த்த கர்கள் பகுதி பகுதியாக விற்றுவிட்டார்கள். வெளிச்ச வீடுகளின் முன்னோடி என்று வர்ணிக்கப்படும் எகிப்தின் அலெக்சாந் திரியா துறைமுகத்திற்கு அருகாமையி லுள்ள பாரொஸ் (PHAROS) தீவில் கி.மு285க்கும் கி.மு247க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. 400அடி உயர மான அதன் உச்சியில் இரவு பகலாக வெளிச்சம் எரிந்தபடி இருக்கும். ஒளியை வெகுதூரம் பரப்புவதற்காக உலோக அடி கள் பொருத்தப்பட்டிருந்தன. கி.பி.14ஆம் நூற்றாண்டு வரை அது கடலோடிகளுக்கு உதவிக் கொண்டிருந்தபின் பாரொஸ் தீவு ஒரு நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டபோது கடல் நீரில் மூழ்கிவிட்டது.

சிறந்த வேலைப்பாடுகள் நிறைந்த பாரிய கல்லறையை மொசோலியம் (MAUSOLEUM) என்று அழைப்பது உலக வழமை. உலகின் மிக அழகான கட்டடம் எனப்படும் இந்தி யாவின் தாஜ்மகால் அப்படியான தொன்று. இன்றைய துருக்கி நாட்டின் உட்பகுதியில் ஒரு சிறிய துறைமுக நகரான கலிகார்னேசஸ் (HALICARNASSUS) என்னும் இடத்தில் கி.மு353 அளவில் கட் டப்பட்ட கல்லறையில் இருந்து மொசோலியம் என்ற சொல் உருவாகியது. இப் பகுதியை ஆட்சி செய்த மொசோலுஸ் (MAUSOLUS) மன்னன் இறந்த பின் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவருடைய மனைவி ஆர்ட்டிமிசியா (ARTEMISIA)ராணி ஒரு ஒப்பற்ற கல்லறையைக் கட்டு வித்தார். இக்கல்லறை இன்று சிதைந்துவிட்டது. அதன் மீட்கப் பட்ட பாகங்கள் சில இலண்டன் அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றி லிருந்து கல்லறையின் பருமன், அழகிய வேலைப்பாடு போன்ற விவரங்களை நிபுணர்கள் கணிப்பீடு செய்துள்ளனர்.

இதில் கூறப்பட்ட புராதன கால அதிசயங்கள் அனைத்தும் எகிப்து, கிரேக்கம், துருக்கி ஆகிய இன்றைய நாட்டுத் தரைப்பரப்பில் காணப்பட்டன. வேறு இடங்களில் அது போன்றவை இல்லையா என்ற கேள்வி எழுகிறது. தெற்கு இங்கிலாந்தின் சோல்ஸ்பெரி பெருவெளியில் (SALISBURY PLAIN) புராதன கால நடுகற்கள் காணப்படுகின்றன. உள் வட்டம் வெளி வட்டமாக மிக உயர மான வெட்டுக் கற்கள் நடப்பட்டு அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக் கற்கள் வைக்கப்பட்டுள்ளன. இவை ஸ்ரோன் கென்ஜ் (STONEHENGE) என்று அழைக் கப்படுகின்றன. 3500 - 4000 வருடங் களுக்கு முன் செல்ற்ஸ் (CELTS) என்ற ஆதி மக்கள் இனம் இதை அமைத்திருக் கலாம் என்று நம்பப்படுகிறது. அமைப்பின் நோக்கம் பற்றிய தர்க்கம் நிலவுகிறது. இறந்தோரைப் புதைக்கும் இடமாகவோ அல்லது இறந்தோருக்கான வணக்கத்தல மாகவோ இருக்கலாம் என்று நம்பப்படு கிறது. நேரக்கணிப்பிற்காக இக்கற்கள் வட்டம் வட்டமாக நடப்பட்டிருக்கலாம், அத் தோடு கோள்களின் நகர்வை அவதானிப் பதற்காகவும் இருக்கலாம் என்றும் சொல் கிறார்கள். இன்றும் இவை நிலைத்து நிற்கின்றன.

கல்லறைகளைப் பொறுத்தளவில் மிகப் பிரமிப்பூட்டும் வகையானதொன்று 1974ஆம் ஆண்டு சீனாவின் சான்க்சி (SHAANXI) மாகாணத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கிணறு வெட்டும் போது 7400 வரையிலான சுட்ட மண் போர் வீரர்கள் மற்றும் குதிரைகள், போருக்குப் பயன்படுத்தும் தேர்கள் (CHARIOTS) என்பன மண்ணில் புதைக் கப்பட்டிருந்ததைக் கண்ணுற்றார்கள். அவர்கள் கொடுத்த தகவலின் அடிப் படையில் சீன அதிகாரிகள் இத்தனை யையும் மீட்டார்கள். துண்டு துண்டாகப் பல மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்ட சீனாவை முதன் முதலாக ஒன்றிணைத் தவர் சீனச் சக்கரவர்த்தி யிங்செங். அவர் முழுச் சீனாவையும் தனது ஆட்சிப்பிடியில்



www.eelamview.com

www.eelamview.com



கொண்டு வந்தபின் தனக்குத் தானே சூட்டிய பட்டம் குவின் சீ குவாங் டீ (QIN SHI HUANG DI)அதாவது குவின் வம்சத்தைச் சேர்ந்த முதலாவது சீனச் சக்கர வர்த்தி என்று பொருள். இவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த பேரரசர்களும் இப் பட்டத்தைத் தமதாக்கியுள்ளனர். பல நூற்றாண்டுகளாக நிலவிய சீன அரசு முறையை நிறுவியவர் என்று முதலாவது குவின் சீ குவாங் டீ சிறப்பிக்கப்படுகிறார். முழு நாட்டிற்கும் ஒரே சீன எழுத்து, சட்டம், நாணயம், நெறுத்தல் அளவை ஆகியவற்றைப் புகுத்தியவரும் அவர்தான். இவருடைய அதிகார வீச்சு கி.மு.246இல் ஆரம்பிக்கிறது.

தனது ஆட்சிக் காலத்தில் அவர் தனது எதிரிகளையும் ஆணையை மீறுவோரையும் மிகவும் கொடூரமாகத் தண்டித்தார். உயிரோடு மண்ணில் புதைக்கும் தண்டனை வழக்கத்தை அறிமுகம் செய்தார். கி.மு.260இல் சாயோ(ZHAO)மன்னனைப் போரில் வென்றபின் அவனுடைய 400,000 படையினரை உயிரோடு புதைத்தார் என்று சீன ஏடுகள் செப்புகின்றன. அவர் தன்னுடைய கல்லறையை உருவாக்கும் போது இந்த முறையைப் பின்பற்றவில்லை. மாறாக சுட்ட மண் சிலைகளைச் செய்து தனது கல்லறைக்கு அருகாமையில் புதைக்க உத்தரவிட்டார். இரு பெரிய நீள் சதுரக் கிடங்குகளில் 7400படையினர் போருக்குத் தயாரான நிலையில் நிறுத்தப்பட்டனர். ஒவ்வொரு மண் சிலையின் உயரம் 5அடி 11அங்குலம். குதிரைகளும், தேர்களும் அவ்வாறு தத்ரூபமாகச் செய்யப்பட்டன. இவற்றை செய்து முடிக்க முப்பத்தியாறு வருடம் பிடித்தது. 7000வரையிலான தொழிலாளர்கள் உருவாக்கப் பணியில் ஈடுபட்டனர். பணி காலத்தில் இறந்தோரின் சடலங்கள் சற்றுத் தூரத்தில் புதைக்கப்பட்டன. இதில் வியப்பு என்னவென்றால் 1974இல் தற்செயலாகக் கண்டு பிடிக்கப்படும்வரை சுட்டமண் போர்வீரர்கள் பற்றிய செய்தியை ஒருவராவது அறியாதிருந்ததுதான். நிகழ் உலகின் அதிசயமான சீனப் பெருஞ்சுவருக்கு நிகரான புகழ் இதற்கு உண்டு. ஏறத்தாழ 2000 வருடங்களுக்கு முன் இந்தச் சிலைக்குத் தீட்டப்பட்ட வர்ணங்கள் இப்போதுதான் சற்று மங்கியுள்ளன. இதுவும் இன்னுமோர் அதிசயம்.

ஏறக்குறைய 2500வருட வரலாறு உடைய தமிழ் இலக்கியத்தில் கி.மு.500 தொடக்கம் கி.பி.200வரையான காலத்தை சங்க இலக்கியகாலம் என்கிறோம். சங்க இலக்கிய காலத்தில் இறந்தோரைப் புதைத்தார்கள் அல்லது எரித்தார்கள் என்பதை இலக்கியக் குறிப்புக்கள் மூலம் அறிகிறோம். களத்தில் வீழ்ந்த வீரருக்கு நடுகல் நாட்டி தெய்வமாக வழிபடும் வழக்கம் தமிழரிடம் இருந்தது. நடுகல்லில் வீரன் பெயரும் வாழ்க்கைக்குறிப்பும் பொறிக்கப்பட்டன. நடுகல் நாட்டி வழிபாடு நடத்துவது பற்றி அகநானூறு, பாடல் 67

"நல்லமர்க் கடந்த நானுடை மறவர்,
பேரும் வீடும் எழுதி அதர்தோறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்"

என்று கூறுகிறது.

வீழ்ந்த வீரன் பற்றிக் கூறும் புறப்பொருள் வெண்பாமாலை "எய்போல் கிடந்தான் என் ஏறு" என்கிறது. (எய் - அம்பு) சங்க இலக்கியம் குறிப்புணர்த்தும் நடுகல் இப்போதுதான் முதன் முறையாகக் கிடைத்துள்ளது. தேனி மாவட்டத்திலுள்ள புலிமான் கோம்பை எனும் சிற்றூரில் மூன்று சங்க கால நடுகற்கள் எடுக்கப்பட்டன. 2300 வருடப் பழைமைவாய்ந்த தமிழ்ப் பிரம்பி எழுத்தில் அதில் வீரின் பெயர் முதலியன பொறிக்கப்பட்டிருந்தன. ஒரு கல்லில் 'கூடல் ஊரில் நடந்த ஆகோள் போரில் உயிரிழந்த பேடு தீயின் அந்தவன்' என்பானுக்கு எடுத்த கல் என்ற செய்தி பழையதமிழில் சொல்லப்பட்டுள்ளது. இந்திய உபகண்டத்தில் கிடைத்த நடுகற்களில் இம்மூன்றும் மிகப் பழையனவாகக் கருதப்படுகின்றன.


களத்தில் வீழ்ந்த எதிரிநாட்டுப் படையினருக்குப் பூரண இராணுவ மரியாதை அளிப்பதும், உடலைப் பக்குவமாக அவன் நாட்டிற்கு அனுப்பிவைப்பதும் உலகின் போரியல் மரபு. அதேபோல் ஒரு நாட்டை ஆக்கிரமிக்கும் இராணுவம் அங்கிருக்கும் இடு நிலங்களையும் போர் வீரர்களின் கல்லறைகளையும் குறைவிடாது பாதுகாக்கவேண்டிய பொறுப்புடையதாகும்.

முதலாம் இரண்டாம் உலகப் போர்களில் பெல்ஜியம், பிரான்சு ஆகிய நாடுகளில் இறந்த ஜேர்மன் படையாட்களின் கல்லறைகள் காணப்படுகின்றன. ஜேர்மன் படைகள் வெளியேற்றப்பட்டாலும் அவர்கள் விட்டுச் சென்ற கல்லறைகள் மிகவும் நேர்த்தியாக இந்த நாடுகளால் பேணப்படுகின்றன. தமிழீழ மண்ணை நிவிரச இராணுவ நடவடிக்கை மூலம் ஆக்கிரமித்த சிங்களப் படைகள் முதல் வேலையாக புலி மாவீரர்களின் துயிலும் இல்லங்களையும் நினைவுத்தூபிகளையும் சேதப்படுத்தினார்கள். சமாதான காலத்தில் விடுதலைப் புலிகள் அவற்றை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவந்துள்ளனர்.

கோப்பாய் துயிலும் இல்லத்தில் ஒரு பக்கலில் குவிக்கப்பட்ட கல்லறைச் சிதைவுகளின்மேல் பின்வரும் வாசகம் தமிழ், ஆங்கில மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. "1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வுக்குப் பின்னர் சிறிலங்காப் படையினர் இங்கே உறங்கிய எம் மாவீரச் செல்வங்களின் கல்லறைகளைச் சிதைத்து அழித்தனர். அந்தக் கல்லறைச் சிதைவுகள் இங்கே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. சில நொடிப் பொழுதுகள் சிரம் தாழ்த்துவோம்" சிறிலங்கா இராணுவத்தின் காட்டுமிராண்டித் தனமும் வெறிப்போக்கும் இன்னும் ஓயவில்லை. வடமராட்சி எள்ளன்குளம் மாவீரர் துயிலும் இல்லம் 2006 செப்ரம்பரில் மூன்று தடவை சேதமாக்கப்பட்டுள்ளது. சுற்றுமதிலில் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ்கள் அடித்து நொருக்கப்பட்டன. துயிலும் இல்லத்தின் பெயர்ப்பலகை உடைத்து எறியப்பட்டது. நுழைவாயில் கதவு நிரந்தரமாக இராணுவத்தினரால் திறந்து விடப்பட்டுள்ளது. கட்டாக்காலி மாடுகள் துயிலுமில்லப் பூந்தோட்டத்தை அழித்துவிட்டன.

அத்தோடு நின்றுவிடாது சிலை உடைப்பு, சிதைப்பு ஆகியவற்றிலும் சிங்களப் படையினர் இன்னும் ஈடுபடுகின்றனர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வளாகத்தினுள் எழுப்பப்பட்டிருந்த முதலாவது கரும்புலி மாவீரன் கப்டன் மில்லரின் திரு உருவச் சிலை உடைத்து வீழ்த்தப்பட்டுள்ளது. 2006 ஆகஸ்து 23ஆம் நாள் இரவு 11.30 மணியளவில் உட்புகுந்த படையினர் இந்த அநாகரிகச் செயலைச் செய்துள்ளனர். செப்ரம்பர் 4ஆம் நாள் வல்வை ஆதி கோவிலடியில் நிறுவப்பட்ட தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் சிலைமீது இரவு ஊரடங்கு அமுலில் இருந்தவேளையில் கழிவு எண்ணெய் ஊற்றியுள்ளனர். இந்தியத் தூதரகம் ஊடாக விடுக்கப்பட்ட எச்சரிக்கைக்குப்பின் அதே படையினர் ஆதி கோவிலடி மக்களைக்கொண்டு எம்.ஜி.ஆர் சிலையைச் சுத்தப்படுத்தியுள்ளனர். அண்மையில் சம்பூரை ஆக்கிரமித்த சிங்களப் படையினர் அனைத்து இந்து, கிறிஸ்தவ ஆலயங்களையும் நிர்மூலமாக்கியுள்ளனர். சம்பூரில் புதிதாக ஒரு புத்தர் சிலையும் அரசமரக் கன்றும் நாட்டப்பட்டுள்ளன.

**கோப்பாய் துயிலும் இல்லத்தில் ஒரு பக்கலில் குவிக்கப்பட்ட கல்லறைச் சிதைவுகளின்மேல் பின்வரும் வாசகம் தமிழ், ஆங்கில மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. "1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வுக்குப் பின்னர் சிறிலங்காப்படையினர் இங்கே உறங்கிய எம் மாவீரச் செல்வங்களின் கல்லறைகளைச் சிதைத்து அழித்தனர். அந்தக் கல்லறைச் சிதைவுகள் இங்கே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. சில நொடிப் பொழுதுகள் சிரம் தாழ்த்துவோம்"**



களத்தில் இறந்த சிங்களப் படையினரின் உடல்களை ஏற்க மறுப்பது அல்லது ஏற்கத்தயங்குவது பற்றிய சர்ச்சை சிறிலங்காவில் நிலவுகிறது. சிறிலங்கா வெளிவிவகார அமைச்சக முன்னாள் அதிகாரி கே. கொடகே, டெயிலி மிரர் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் (DAILY MIRROR 2005 FEBRUARY 21) "புலிகள் எம்மை மீண்டும் மீண்டும் கேட்டபோதும் நாம் ஆனையிறவுச் சமரில் இறந்த எமது படையினரின் உடல்களை ஏற்கமறுத்துள்ளோம். இது பற்றி நான் ஒரு மூத்த அரசியல்வாதியைக் கேட்டபோது, அவ்வளவு எண்ணிக்கையில் உடல்கள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டால் அரசு விழ நேரிடும் என்று பதிலளித்தார். இறந்தோர் காணாமல் போனோர் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களுக்கு பன்சுகல மதச்சடங்குகள் ஒன்றுமே கிடைக்காது."

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜப்பான் இதுவரை ஈடுபட்ட இராணுவ நடவடிக்கைகள் அனைத்திலும் இறந்த 2.5மில்லியன் படையினரின் ஆத்ம அஞ்சலிக்காக நிறுவப்பட்ட யசுக்கினி நினைவாலயம் இருக்கிறது. (YASUKUNI SHRINE) இரண்டாம் உலகப் போரில் போர்க்குற்றவாளிகளாகக் காணப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட 14 ஏ கிளாஸ் (A CLASS)போர் குற்றவாளிகளின் ஆத்மாக்களுக்கும் இக்கோயிலில் அஞ்சலி செலுத்தப்படுகிறது. ஜப்பானியப் படையெடுப்புக்களால் பெரும் பாதிப்படைந்த சீனா, கொரியா ஆகிய நாடுகள் இதற்குக் கடும் ஆட்சேபம் தெரிவிக்கின்றன. முன்னாள் ஜப்பான் பிரதமர் கொய்சுமி வணக்கம் செலுத்துவதற்காக அங்கு அடிக்கடி சென்று வந்தார். இதனால் சீன ஜப்பான் உறவுகள் கசப்படைந்தன. நான் அங்கே செல்லுவது எனது நாட்டின் உள்விவகாரம், அதில் வெளியார் தலையீடு இருக்கக் கூடாது என்கிறார் கொய்சுமி. யசுக்குனி என்றால் ஜப்பான் மொழியில் அமைதி நிலவும் இடம் என்று பொருள். ஷின்ரோ மத ஆசாரப்படி பேணப்படும் யசுக்குனி ஆலயம் உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும் கடும் உணர்வலைகளை எழுப்புகிறது. 1868ஆம் ஆண்டு தொட்டு ஷின்ரோ ஜப்பானின் தேசிய மதமாக இடம் பெறுகிறது. ஜப்பான் நாட்டு வர்த்தப் பிரமுகர்கள் சீனாவில் பெருமளவு முதலீடுகள் செய்த காரணத்தால் அதனோடு நல்லுறவைப் பேண விரும்புகின்றனர். யசுக்குனி கோயிலை டோக்கியோவிலிருந்து பிறிதோர் உட்புற நகருக்கு மாற்றும் யோசனையை அவர்கள் முன்வைக்கின்றனர். சில அரசியல் வாதிகளும், பத்திரிகை முதலாளிகளும் இதற்கு ஆதரவளிக்கின்றனர். ஷின்ரோ மதபீடம் சாதகமான பதில் தரவில்லை.

நாசி ஜேர்மனி படுகொலைசெய்த ஆறு மில்லியன் யூதர்களுக்கான உத்தியோகபூர்வ நினைவாலயம் இஸ்ரேல் அரசினால் ஜெருசலேம் நகரில் திறக்கப்பட்டுள்ளது. அதன் பெயர் யாத் வாசெம். பைபிள் வாசகம், இசையா, அத்தியாயம் 56, பாடல் 5இல் "நான் அவர்களுக்கு எனது வீட்டில் எனது சுவர்களுக்குள் ஒரு நினைவாலயமும் பெயரும் தருவேன்" என்ற வரி வருகிறது. ஈபுரு மொழில் நினைவாலயமும் பெயரும் என்ற சொற்கள் யாத் வாசெம் எனப்படுகின்றன. இது ஆங்கிலத்தில் அப்படியே YADVASHEM எனப்படுகிறது. நினைவு மண்டபம், நினைவுச் சிற்பம், கலைக்கூடம், ஆவணக் காப்பகம், நாசிகள் கொன்ற யூதர்களின் விவரம் அடங்கிய பகுதி, கல்வி நிலையம், ஆராய்ச்சி நிலையம் என்பன யாத் வாசெமில் அடங்குகின்றன. உயிராபத்தையும் பொருட்படுத்தாது யூதர்களைக் காப்பாற்றிய யூதர்கள் அல்லாதோரின் பட்டியல் இங்கு வைக்கப்பட்டுள்ளது. இப்பெருமக்கள் "தேசங்களின் நீதியானோர்" (RIGHTEOUS AMONG THE NATIONS) என்று கௌரவிக்கப்படுகின்றனர். இஸ்ரேலுக்குச் செல்லும் உலகத் தலைவர்கள் யாத் வாசெம் சென்று மரியாதை வணக்கம் செலுத்துகிறார்கள். பல நூற்றாண்டு காலம் நிலவிய கிறிஸ்தவ - யூத முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் 2000 மார்ச்சு 23ஆம் நாள் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் யாத் வாசெமுக்கு வருகைதந்தார். 1948இல் இஸ்ரேல் நாடு நிறுவப்பட்டபோது கத்தோலிக்க மதபீடம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது நினைவிருக்கலாம். பாப்பரசின் விஜயத்தோடு முரண்பாடுகளுக்கு முடிவு கட்டப்பட்டது.

வியட்நாம் போரில் உயிரிழந்த அமெரிக்கப் படையினருக்குத் தலைநகர் வாஷிங்ரனில் ஒரு பிரத்தியேக நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது. 1982 நவம்பர் 13ஆம் நாள் அது நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. தலைநகரின் முக்கிய பூங்கா ஒன்றில் மூன்று ஏக்கர் நிலம் நினைவுச் சின்னம் வைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் ட எழுத்துப்போல் இரு கருங்கற் சுவர்கள் நினைவுச் சின்னமாக நிறுத்தப்பட்டுள்ளன. திறந்த வெளியில் நிற்கும் இரு சுவர்களின் மொத்த நீளம் 246அடி 9 அங்குலம். சுவர்களுக்கான கருங்கற்கள் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் இருந்து கொண்டுவரப்பட்டு அமெரிக்காவின் வேர்மொன்ற் (VERMONT) மாநிலத்தில் செப்பனிடப்பட்டுள்ளன. உயிர்நீத்த 58,159 படையினரின் பெயர்கள், இறந்த திகதி வாரியாகச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய இராணுவ அணி, பதவி, விருதுகள், பதக்கங்கள் போன்ற விவரங்கள் இதில் பொறிக்கப்படவில்லை. இரு சுவர்களும் அடுத்துக் காட்டும் பளிங்குபோல் மினுக்கப்பட்டுள்ளன. சுவரிலுள்ள பெயர்களைப் படிப்போரின் விம்பம் சுவரில் நன்கு தெரியும் விதத்தில் சுவரைப் பளிங்காக்கி உள்ளனர். பெயரைப் படிப்பவரும் பெயருக்குரியவரும் ஒருவரே என்ற தத்துவ விளக்கமாகப் பளிங்குச்சுவர் விளங்குகிறது. நினைவுச் சின்ன வரலாற்றில் வியட்நாம் வீரர்களுக்கான நினைவுச் சுவர் மிகவும் வித்தியாசமானது.

**கலாநிதி க.சோமாஸ்கந்தன்**



www.eelamview.com

www.eelamview.com



# "தொடரும் பயணம்"

– தூயவன் –



"இவற்ற பிள்ளையள் தான் இரண்டு பேரும். பார்க்க வந்த இடத்தில சின்னவர் நித்திரையென்றதால கட்டிலில வளத்தியிருக்கினம். தாய்வந்தவுடன் கூட்டிப்போயிருவா" உதவி மருத்துவர் மெல்ல விளக்குகின்றார். அநாவசியமாக குழந்தைகளை விடுதியில் தங்க அனுமதிப்பதில்லை. இலகுவாக கிருமித் தொற்றுக்கு உள்ளாகி விடுவார்கள் என்பதால். இவர் எதுவும் கதைக்காமல் நோயாளியின் குறிப்பேடுகளை எடுத்துப் பார்க்கின்றார். தேவையானவற்றைக் குறித்துக் கொள்கின்றார். "இந்தப் பிள்ளைக்கு விளங்குமா? இனித்தன்ர அப்பா தன்னுடன் ஓடிப்பிடித்து விளையாட முடியாது என்பது...!"

**"டொக்டர்** மயக்கமருந்து குடுக்காதீங்கோ... கிபிர் வாறான்" வெளியில் நின்ற பணியாளர் ஒருவர் சத்திரசிகிச்சைக் கூடத்தினுள்ளே எட்டிச் சொல்கின்றார். சத்திரசிகிச்சைக்காகத் தேர்ந்த நோயாளியொருவர் சத்திரசிகிச்சைக்கான மேசையில் படுக்கவைக்கப்பட்டு சிகிச்சை ஆரம்பிக்க இருக்கையிலேயே இவ் அவசர தகவல் சொல்லப்பட்டது. அத்துடன் அனைத்துச் செயற்பாடுகளும் ஒத்திவைக்கப்பட்டது. மாடியில் நின்ற மருத்துவர்கள், பணியாளர்கள், நோயாளிகள் அனைவரும் கீழ்த்தளம் நோக்கி இறங்கி ஓடத்தொடங்கி விட்டார்கள். கீழே சிகிச்சை பெறவந்தவர்களும் ஏனையவர்களும் வெளிநோக்கி ஓடுகின்றார்கள். விண்ணதிர இரையும் கிபிர் விமானங்கள் எல்லோர் முகங்களிலும் மரணபயத்தைத் தோற்றுவிக்கின்றது. மக்கள்வாழ் பெருநிலப்பரப்பின் பிரதான நகரமே அல்லோலகல்லோலப்பட்டது. சிலநிமிடநேர விமானப்பறப்பு ஒரு மக்கள் சமூகத்தின் வாழ்வியக்கத்தையே மறுவழமாய்ப் புரட்டிப்போட்டது. மருத்துவமனை, பாடசாலை, கோயில், குளம் என்றில்லாமல் எங்குமே மக்கள் சிதறியோடுகின்றனர். குண்டு விழுந்ததோ இல்லையோ எல்லோருக்கும் குலப்பன் எடுக்கின்றது. சத்தம் மறைந்தவுடன் 'அப்பாடா' என நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். சொல்லவெண்ணா மனக்கிலேசமும் உணர்வுக் குழப்பமும் அடைகின்றனர். இவ்வளவும் ஏன்? தாங்கள் இம்முறை தப்பிவிட்டோம் என்றும் நினைப்பர். அல்லது தொடர்ந்து தப்பி வாழமுடியுமா எனும் சந்தேகம் ஏற்படுத்திய தவிப்பா? அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளாக மக்களும், அவர்களின் வாழ்வாதார இடங்களும் தாக்கப்பட்டதன் விளைவா?

சிலமணிநேரமாக மருத்துவமனையின் நிலையையும், தமிழர்களின் தலைவிதியையும் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறார் அம் மருத்துவர். அவருக்கு சில நாட்களின் முன்னர் அனுமதிக்கப்பட்ட காயக்காரர்களின் ஞாபகம் வந்தது. முகமாலையில் எதிரி மேற்கொண்ட 'சினைப்பர்' தாக்குதலில் தலைக்காயத்துடன் ஒரு போராளி கொண்டுவரப்பட்டிருந்தான். அவனது மூளையின் ஒரு பகுதி வெளித்தெரிந்தது. அவன் சுயநினைவு அற்ற நிலையில் சாவுக்கும் வாழ்வுக்கும் இடையில் உழன்றுகொண்டிருந்தான். பூரண மயக்க மருந்து கொடுத்து சத்திரசிகிச்சை செய்வதில் ஆபத்து அதிகம் எனக் கருதப்பட்டது. ஆதலால் காயத்தை அண்டிய பகுதியில் விறைப்பூசி மருந்து ஏற்றப்பட்டு சத்திரசிகிச்சை செய்யப்படுகின்றது. 'ஆள் தப்புமா?' இல்லையா?, எதுவும் சொல்லமுடியாது. பெரும்பாலும் இறந்துவிடுவான். இறந்தாலும் நல்லதுதான். தப்பினாலும் இவனால் முன்மாதிரி செயற்படமுடியாது. பழைய ஞாபகங்கள் வருவது கடினம். வந்தாலும் உடலில் பெரும்பகுதி இயங்க மறுக்கும். அல்லது கட்டுப்பாடின்றி இயங்கும்... சிகிச்சை முடிந்த பின்னரும் யோசித்துக் கொண்டிருக்கின்றார். "டொக்டர் பாம்பு கடிச்சு ஒராள் வந்திருக்கு" உதவி மருத்துவர் கூறுகின்றார். முதற் காயக்காரனை தீவிர சிகிச்சைப்பிரிவிற்கு அனுப்பும்படி பணித்துவிட்டு அப்போராளியைப் பார்க்கப் போகின்றார். "நல்ல மழைதானே! பங்கருக்குள்ள வெள்ளம் வந்திட்டுதாம் அதோட பாம்பும் புகுந்துட்டுதாம், இதுவும் முகமாலையிலதான் நடந்தது." நோயாளியை அணமிக்கும் இடைநேரத்தில் சொல்லி முடிக்கின்றார். பரிசோதித்ததில் பாம்புக்கடிக்கு இலக்கானவர் ஆபத்தான நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தினார். மயக்கமடைந்து விட்டான், சுவாசத்திற்குக் கஸ்ரப்படுகின்றான். சிகிச்சைக்கான குறிப்புகளை எழுதியவர் அந்நோயாளியையும், தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கும்படி கூறுகின்றார்.

தொடராக அடுத்தடுத்து வந்த காயங்களுக்கு சிகிச்சையளித்ததால் மருத்துவர் களைப்படைந்திருந்தார். உணர்வுகள் மறந்துவிட்டது போன்ற பிரமையும் ஏற்பட்டது. "ஏனையவர்கள் போல் எங்களால் மனித வாழ்க்கையைப் பார்க்கமுடியாது போலும்" எனத் தன்னுள் எண்ணிக்கொள்கிறார். விரைந்துவரும் வாகனச்சத்தம் கேட்கிறது. இன்னொரு காயத்திற்கு சிகிச்சையளிக்கத் தன்னை உளரீதியாகத் தயார்ப்படுத்திக் கொள்கிறார். அதுவும் ஒரு 'சினைப்பர்' சூட்டுக்காயம் தான். துப்பாக்கி ரவை வயிற்றைத்துளைத்து முள்ளந்தண்டை தாக்கிவிட்டது. இடுப்பிற்குக்கீழ் உணர்வு இழக்கப்பட்டுவிட்டது. வயிற்றைத்திறந்து உயிர்க்காப்பு சத்திரசிகிச்சை செய்யப்படுகின்றது. அதற்குள் சில மணித்தியாலங்கள் கடந்துவிட்டிருந்தது. சத்திரசிகிச்சைக்குப் பின்னரான சிக்கல் தன்மைகளை மேவி உயிர்தப்புவது என்பது அதிசயம்தான். அப்படித் தப்பினாலும் இவனால் பழையபடி இயங்கமுடியாது. ஓடியாடித் திரியமுடியாது. இயற்கைக்கடன் கழிப்பது போன்ற அவசிய செயற்பாட்டிற்கும் இன்னொருவரில் தங்கியிருக்க வேண்டிவரும். பொதுவாக அவசர சிகிச்சையானது உயிர்காப்பதுடன் ஒரு மருத்துவரின் கடமை முடிந்துவிடுவதில்லை. காயமுற்று வலுவிழந்தவனைத் தொடர்ந்தும் உணர்வுபூர்வமாக அணுகவேண்டும். அவன் மாற்றுவலுக்களைப் பெற்று பழைய நிலைக்குவர ஒத்துழைப்பு வழங்கவேண்டும். உதவி நிறுவனங்கள், துறைசார் அமைப்புக்களிடையே ஒருங்கிணைப்பை மேற்கொள்ள வேண்டும். மருத்துவர்களின் பற்றாக்குறை, நோயாளிக்குத் தனது உரிமைகள் பற்றிய போதிய விளக்கமின்மை எனப் பல காரணங்கள் இணைந்து அவனது இயலாத்தன்மையை அதிகரித்துவிடுகின்றது.

சத்திர சிகிச்சைகளுக்கு இடையேயான சிறுநேர இடைவெளியில் மன எண்ணங்களை ஓடவிடுபவருக்கு, கிபிர்ச் சத்தம் ஏற்படுத்திய அசாதாரண சூழ்நிலை சிந்திப்பதற்குச் சில மணிகளை ஒதுக்கிவிட்டிருந்தது. சூழ்நிலை ஓரளவு வழமைக்குத் திரும்பிவிட்டதை அவதானிக்கிறார். சத்திரசிகிச்சைக் கூடத்தினுள் பிரவேசிப்பதற்கு முன், விடுதிகளில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களை ஒரு சுற்றுப் பார்வையிடச் செல்கிறார். உதவி மருத்துவருடன் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு வருகின்றார். தலையில் 'சினைப்பர்' காயப்பட்டுவந்த போராளியை அனுமதித்திருந்த படுக்கைக்கு அருகில் வரும்போது அடுத்த நாளே அவன் இறந்துவிட்டதை நினைவுபடுத்துகின்றார். பக்கத்துப் படுக்கையில் இருந்த பாம்புக்கடிக்கு இலக்கான போராளி இன்னொரு விடுதிக்குத் தொடர் சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்தார். அருகிருந்த கட்டிலை அவதானித்தவர் துணுக்குற்றார். அதில் பார்த்தவுடன் தூக்கி முத்தமிடவேணும் போல் தோன்றும் அழகான எட்டுமாதப் பாலகன் ஒருவன் நித்திரை செய்கின்றான். அதற்கு அடுத்த கட்டிலில் இடுப்பின் கீழ் உணர்விழந்த வயிற்றுக்காயப் போராளி படுத்திருக்கின்றார். அவருக்கு அருகில் நான்குவயது மதிக்கத்தக்க அழகான சிறுமி ஒருத்தி நிற்கின்றாள். சிறிது கவலைதோய்ந்த முகத்துடன் காணப்படுகின்றாள். 'இவற்ற பிள்ளையள்தான் இரண்டுபேரும். பார்க்கவந்த இடத்தில சின்னவர் நித்திரையென்றதால கட்டிலில வளத்தியிருக்கினம். தாய்வந்தவுடன் கூட்டிப்போயிடுவா" உதவி மருத்துவர் மெல்ல விளக்குகின்றார். அநாவசியமாக குழந்தைகளை விடுதியில் தங்க அனுமதிப்பதில்லை. இலகுவாக கிருமித்தொற்றுக்கு உள்ளாகிவிடுவார்கள் என்பதால். இவர் எதுவும் கதைக்காமல் நோயாளியின் குறிப்பேடுகளை எடுத்துப் பிரட்டிப் பார்க்கின்றார். தேவையானவற்றைக் குறித்துக் கொள்கின்றார். "இந்தப் பிள்ளைக்கு விளங்குமா? இனித் தன்ர அப்பா தன்னுடன் ஓடிப்பிடித்து விளையாடமுடியாது என்பது...!" எழுந்த கேள்வியை மனதினுள்ளேயே அடக்கிவிடுகின்றார். சிறுமியின் கன்னத்தை வாஞ்சையுடன் வருடிவிட்டு அப்பால் நகர்கின்றார். மற்ற விடுதிக்கு வருகின்றார். ஓரளவு குணமடைந்த, தொடர்ந்து சிகிச்சை தேவைப்படும் போராளிகள் அங்கு காணப்படுகின்றார்கள். கை, கால் இழந்தவர்களும், பாரிய சிதைவுக் காயங்களுக்கு உட்பட்டவர்களும், தங்கள் வலிமறந்து ஓரளவு கலகலப்பாகவே காணப்படுகின்றனர். அவர்கள் ஏற்படுத்தும் சத்தம் இவருக்குக் கேட்கின்றது. அது மனக் கிளர்ச்சியை ஏற்படுத்தவே முகத்தில் மகிழ்வின் ரேகைகள் படர்கின்றது. இவர் விடுதியினுள் நுழைய சத்தம் அடங்குகின்றது. ஒவ்வொருவராகப் பார்வையிடுகின்றார். பாம்புக்கடிக்கு இலக்கான போராளியையும் பார்க்கின்றார். "ஆளில நல்ல முன்னேற்றம். இன்னும் ரெண்டுநாள் நிண்டால் போதும்" என்று கூறி அடுத்த போராளியை நோக்கி நகர முற்படுகின்றார். "டொக்டர்..." எனத் தயங்கியபடியே இவன் அழைக்கின்றான். நின்று திரும்பியவர் என்ன? என்பதுவாகப் புருவம் உயர்த்தி வினாவுகின்றார். "நான் போகலாமா..." மீண்டும் தயங்கியவாறே கேட்கின்றான். "ஏன் என்ன அவசரம் ரெண்டு நாள் பார்த்துப் போகலாம் தானே" எனக் கேட்கின்றார். "இல்ல... அண்ணா வீரச்சாவு... வீட்ட இன்னும் போகேல்ல..." கூறியவன் முடிக்க முதல் "எப்ப வீரச்சாவடைந்தார்?" என மருத்துவர் கேட்கிறார். "முந்தநாள் நான் வந்த அண்டுதான் தலையில காயப்பட்டு வந்தவர்..." ஏதோ யோசித்த மருத்துவர் கேட்கின்றார், "உங்களுக்கு பக்கத்துக் கட்டில்லதானே இருந்தவர். அப்ப தெரியாதா?" "இல்லத் தெரியாது. அப்ப எனக்கு மயக்கம் தெளியேல்லை. அதுக்கு முதல் ஆள் வீரச்சாவடைந்துவிட்டார். நான் இங்க இருக்கிறது வீட்டுக்காரருக்குத் தெரியாது" கூறிமுடிக்கையில் அவன் கண்கள் பனிக்கின்றன. எதனாலோ தாக்குண்டவர்போல அவனையே பார்த்தவண்ணம் சிறிதுநேரம் நிற்கிறார். "திருமணம் ஆனவரா..." இப்பொழுது இவர் தயங்கியபடியே கேட்கின்றார். அவரது தொனியில் 'இல்லை' எனும் பதிலை எதிர்பார்ப்பது தெரிகின்றது. "ஓம் மூன்றுவயதில ஒரு மகள் இருக்கிறா, அண்ணிக்கு இப்ப பெறுமாதம்..." அவன் கூறிமுடிக்கத் தனது கால்கள் உறுதி தளர்வதாகஉணர்கிறார். அருகிருந்த கட்டிலின் ஓரத்தை மெல்லப்பிடித்து தன்னை நிலைநிறுத்திக்கொள்கிறார். கையுடன் கொடுத்துவிடவேண்டிய மருந்துகளைக் குறிப்பேட்டில் எழுதி விளங்கப்படுத்தி விடுகின்றார். "எதும் பிரச்சினையெண்டால் நேர இங்கவாங்கோ!" அனுதாப உணர்வுகளை வெளிக்காட்ட விரும்பாதவர் அடுத்த நோயாளிகளைப் பார்வையிடுகின்றார். மருத்துவர் விடுதியைவிட்டு வெளியேறுகின்றார்.

"டொக்டர்...! வீரச்சாவடைந்தவரும், முள்ளந்தண்டிலே காயப்பட்டவரும் மீள இயக்கத்தில் இணைந்தவையள், முதல் நடந்த சண்டையிலேயும் காயப்பட்டவையள், பிறகு ஏனோ இயக்கத்தில இராது விலத்தி திருமணம் செய்திருந்தவையள். நாடு இருக்கிற நிலையில அனுபவம் வாய்ந்த போராளிகள் சேர்ந்தால் நல்லது என்றதால திரும்பவும் சேர்ந்தவையள்" உதவி மருத்துவர் சற்று வேகமாகவே சொல்லி முடிக்கின்றார். அவர் கூறுவதைத் தலையாட்டுவதன் மூலம் தான் கேட்பதாக வெளிக்காட்டியவர், கடமையைத் தொடர சத்திர சிகிச்சைக்கூடம் நோக்கிச் செல்கின்றார்.



www.eelamview.com

www.eelamview.com



(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் வழியைக் காட்டினான். நம்பைக்குள மண் அதிர்ந்தது. அந்தப்பொழுதில் அக்பர் அவர்களுக்குள் ஒருவனாய் நின்று ஆடிப்பாடி வளர்த்த நான்கு இளம் போராளிகளை விலையாய்க் கொடுத்து இரு டாங்கிகளையும் ஒரு துருப்புக்காவியையும் அழித்து இரு டாங்கிகளைச் சேதமாக்கியும் எதிரியின் கவசப் படைக்கு வலுவான அடியைக்கொடுத்தான்.

இத்தாக்குதல் முறியடிப்பின் மூலம் களத்தை முழுமையாய் வழிநடத்தும் கட்டளைத் தளபதிகளுக்கு விக்டர் விசேட கவச எதிர்ப்பு அணியின் செயற்பாட்டில் சங்கடமற்ற செயற்திறன் மீதான நம்பிக்கையை அக்பர் ஏற்படுத்திக்கொடுத்தான்.

10.06.1997அன்று தாண்டிக்குளத்தில் தளம் அமைத்திருந்த ஜயசிக்குறு படைமீது ஒரு வலிந்த தாக்குதலை எமது படையணிகள் மேற்கொண்டன. இந்தக் களத்திலும் எதிரியின் டாங்கிகளின் நகர்வை முறியடிக்க ஒரு பிளாட்டூன் போராளிகளுடன் அக்பர் களமிறங்கினான். சண்டை உக்கிரமாய் நடந்தது. எதிரியை அண்மித்து மேற்கொண்ட இத்தாக்குதலின் ஒரு கட்டத்தில் அக்பர் விழுப்புண் அடைகின்றான். விழுப்புண்ணின் வலி அவன் உடலை வருத்தியதை விட எதிரி எங்கள் தேசம்மீது மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பின் வலி அதிகமாய் இருந்தது. விழுப்புண்ணிற்கு இரத்தத்தடுப்புத் துணியைக் கட்டிக்கொண்டு தொடர்ந்தும் தன் அணியை வழிநடத்திச் சண்டையிட்டான். இச் சண்டையில் இரு டாங்கிகளைத் தாக்கி அழித்து ஒரு துருப்புக்காவியைச் சேதமாக்கி தாக்குதல் ஓய்விற்கு வந்தபின்னரே அக்பர் தளம் திரும்பினான்.

அக்பர் களங்களில் சாதித்த வெற்றிகளுக்கு அவன் வளர்த்த அணித் தலைவர்களும் காரணமாயிருந்தனர். தன்னிடமிருந்த நற்பண்புகளை அவர்களுக்கும் ஊட்டி வளர்த்தான். தனித்து முடிவெடுத்துச் செயற்பட வேண்டிய நேரங்களில் அதற்கும் சந்தர்ப்பம் கொடுத்தான். கட்டம் கட்டமாய்ப் பாரிய இழப்புக்களைச் சந்தித்தபடி முன்னேறிய எதிரிப்படையைப் புளியங்குளத்தில் வைத்து ஒரு வலிமையான தடுப்பு அரண் அமைத்துச் சண்டையிட்டன எமது படையணிகள்.

19.08.1997 அன்று காலைப்பொழுது. பேரிரைச்சலைக் கிளப்பியவாறு வேகமாய் வந்த டாங்கிகளும் துருப்புக்காவியும் எங்களது காப்பரண்களை ஏறிக்கடந்து புளியங்குளம் சந்தியை மையப்படுத்தியிருந்த எமது தளத்திற்குள் நுழைந்தன. நிலைமையைப் புரிந்துகொண்டு சுதாகரித்த எமது அணிகள் முகாமிற்குள் எதிரியைச் சல்லடை போட்டார்கள். ஆர்.பி.ஜி கொமாண்டோப் போராளிகளுக்கு மேஜர் காவேரிநாடன் கட்டளை வழங்கி வழிநடத்த முகாமிற்குள் நுழைந்த எதிரியுடன் பதட்டமில்லாமல் சமரிட்டு இரண்டு டாங்கிகளை அழித்தும் ஒரு துருப்புக்காவியைக் கைப்பற்றியும் சிலவற்றைச் சேதமாக்கியும் எதிரியின் கனவைச் சிதைத்து ஓட ஓட விரட்டியடித்தனர். இந்தச் சண்டையின்போது அக்பர் களத்தில் இல்லாபோதும் அவன் வளர்த்த அணித் தலைவர்களும் போராளிகளும் விக்ரர் விசேட கவச எதிர்ப்பு அணியின் பெயரை நிலை நிறுத்தினர்.

இப்படி ஜயசிக்குறு களத்தில் அக்பர் பல சண்டைகளை எதிர்கொண்டான். ஒவ்வொரு சண்டைகளிலும் எதிரியின் டாங்கிப் படைக்கு நெடுக்குவரியைக் கண்டால் குலை நடுங்கும்படி உருவாக்கினான். எப்போதாவது டாங்கிகள் பேசுமாயின் தாங்கள் நடுங்கிப் பயந்து ஒடுங்கிப்போனது பற்றி அவைகூடச் சொல்லும். ஏனென்றால் அக்பர் தன் போராளிகளை வைத்து களங்களில் அப்படித்தான் சாதித்தான்.

ஓயாத அலைகள் - 02 நடவடிக்கை தலைவர் அவர்களால் திட்டமிடப்பட்டு கிளிநொச்சி நகரையும் பரந்தனையும் ஊடறுத்து எதிரியை இரண்டாகப் பிரித்துத் தாக்கும் அணிகளுடன் விக்ரர் விசேட கவச எதிர்ப்பு அணியும் இணைக்கப்பட்டது. சண்டை தொடங்கியதும் ஊடறுப்பு அணிகள் உள் நுழைந்தன. கிளிநொச்சிப் படைத்தளம் தனிமைப்படுத்தப்பட்டது. வயல்வெளிகளுக்குள் இரண்டு பகுதியாலும் முன்னேற முயலும் எதிரியைத் தடுத்துநிறுத்தும் களச் செயற்பாட்டில் அணிகள் ஈடுபட்டன. கிளிநொச்சித் தளம் மீது பலமுனைகளில் அழுத்தம் கொடுத்துத் தாக்குதல்தொடுக்க முற்பட்டபோது கிளிநொச்சியைத் தம்முடன் இணைப்பதற்காக பரந்தனில் இருந்து டாங்கிகள் சகிதம் படையினர் முன்னேறினர். இவர்களை வழிமறித்த ஏனைய படையணிப் போராளிகளும் விக்டர் விசேட கவச எதிர்ப்பு அணிப் போராளிகளும் கடும் சமர்புரிந்தனர்.

அவ்வேளையில் நிலைகளைப் பார்த்து உறுதிப்படுத்தியபடி வந்துகொண்டிருந்த அக்பரும் ஏ - 9 பிரதான சாலையை அண்மித்திருந்தார். முன்னேறிய டாங்கிகளைத் தாக்கி அழிக்கும் பொறுப்பை மணிவண்ணனிடம் ஒப்படைத்துவிட்டுத் தான் நின்ற பகுதி நோக்கி வந்துகொண்டிருந்த துருப்புக்காவி ஒன்றினை அருகில் நின்ற கொமாண்டோ வீரனின் ஆர்.பி.ஜியை வாங்கித் தானே தாக்கியழித்தான். இந்தத் தாக்குதலில்தான் லெப். கேணல் மணிவண்ணனும் ஒரு டாங்கியைத் தாக்கியழித்தான். தங்களது கவசங்கள் உடைந்ததால் எதிரியின் உளவுரனும் உடைந்தது. பரந்தனையும் கிளிநொச்சியையும் இணைக்கும் அவர்களின் கனவு கைகூடாமல் போனது. கிலேசமடைந்த சிங்களப்படை கிளிநொச்சியைவிட்டுத் தப்பியோடியது.

இதேபோன்றுதான் 26.06.1999 பள்ளமடுப் பகுதிமீது மேற்கொள்ளப்பட்ட ரணகோச நடவடிக்கை மீதும் அக்பரின் படையணி முத்திரை பதித்தது. இந்தச் சண்டையில் எதிரி டாங்கிகளைக் கூடுதலாகப் பயன்படுத்தி டாங்கி நகர்வாகவே மேற்கொண்டான். ஆர்.பி.ஜி அணிக்கு இது ஒரு சவாலான சண்டையாக இருந்தது. டாங்கிகள் உந்துகணைகளை அந்த நிலம் முழுவதும் விதைத்தது. காப்பு மறைப்புக்கள் பெரிதாக இல்லாத அந்த நிலத்தில் நின்றபடி அக்பர் தெளிவாகக் கட்டளைகளை வழங்கினான். அக்பரின் கட்டளைக்கேற்ப நிலைகுலையா வலிமைகொண்ட போராளிகள் கடும் சமர்புரிந்தனர். இந்தச் சண்டையின் முடிவில் ஏழு போராளிகள் உயிர்களைத் தாயக தேசத்திற்காகக் கொடுத்து ஆறு டாங்கிகளை எரித்தழித்திருந்தனர். எதிரியின் கவசப் படையின் பலத்தை விக்ரர் விசேட கவச எதிர்ப்பு அணி நிலைகுலையச் செய்தது.

இப்படித்தான் ஜயசிக்குறுப் படைமூக்கை நுழைத்த திசையெல்லாம் அக்பர் செயலால் தன்னை வெளிப்படுத்தினான். அக்பரின் குறியீட்டுப்பெயர் ‘அல்பா - 1’. களத்திலே ‘அல்பா - 1’ வந்துவிட்டால் எல்லாப் போராளிகளுக்கும் உடலில் புது இரத்தம் ஓடும். களத்தில் ‘அல்பா - 1’ இன் ஆட்கள் வந்தால் எதிரிப்படைக்கு வியர்த்து ஓடும். அப்படித்தான் அக்பர் சாதித்தான். அக்பர் எந்தச் சூழ்நிலையிலும் எக்கணத்திலும் தனித்து முடிவெடுத்துச் செயற்படுத்தும் திறன்வாய்ந்தவன். ஒட்டிசுட்டான் பகுதியை ஆக்கிரமிக்கும் நோக்கோடு இரகசிய நகர்வின்மூலம் எதிரி எமது பகுதிக்குள் நுழைந்த செய்தி அக்பரின் காதுக்கு எட்டிய உடனேயே தனது போராளிகளின் ஆர்.பி.ஜி உந்துகணை செலுத்திகளை வாங்கிக்கொண்டு அவர்களின் கையில் துப்பாக்கிகளைக் கொடுத்து அணியினைத் தயார்ப்படுத்தும்படி கூறிவிட்டு எதிரி முன்நகர்ந்த இடங்களைக் கண்டறிவதற்கு அக்பர் உடன் விரைந்தான். அப்போது அக்பரின் முகாம் அந்தப் பிரதேசத்தை அண்டிய பகுதியில்தான் அமைந்திருந்தது. முன்னேறிய எதிரியை நகரவிடாமல் உடனடியாகவே ஒரு தடுப்பு நிலையை உருவாக்கி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து ஏனைய தாக்குதல் அணிகள் அந்த இடத்தைப் பொறுப்பேற்கும் வரை அவனே அந்த நிலைகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தான்.

ஆனையிறவை வீழ்த்துவதற்காக இத்தாவிலில் ஒரு தரையிறக்கத்தினைச் செய்து ஒருமாத காலம் சமர் புரிந்தபோது அக்பரும் அவன் போராளிகளும் எதிரியின் கவசப்படையின் முன்னேற்ற முயற்சிகள் அனைத்தையும் முறியடித்துப் பல கவசங்களைச் சிதைத்தனர். இத்தாவிலில் சிங்களம் சந்தித்த தோல்விக்கும் ஆனையிறவை வீழ்த்தி விடுதலைப்புலிகள் வெற்றிவாகை சூடியதற்கும் அக்பரிற்கும் அவன் படையணிக்கும் பெரும் பங்கிருந்தது.

விடுதலைப்புலிகளிடம் வீழ்ந்துவிட்ட ஆனையிறவை மீளக் கைப்பற்றும் நோக்கோடு ‘தீச்சுவாலை’ என்ற பாரிய இராணுவ நடவடிக்கையை எதிரி மேற்கொண்டபோது டாங்கிகளை அவன் முந்நிலைப்படுத்தவில்லை. ‘ஜயசிக்குறு’ களச் சமர்களின்போது இஸ்ரேல் தயாரிப்பில் உருவான டாங்கிகளையும் துருப்புக்காவிகளையும் அக்பர் நொருக்கி அழித்தான். அவற்றின் சுழல்மேடையினையும் சுடுகலங்களையும் தன் காலடிக்குள் பணியவைத்தான். ஒட்டுமொத்தமாய் களத்தில் டாங்கிகளின் செயற்திறனை பூச்சியத்திற்குக் கொண்டுவந்தான். தலைவர் அவர்கள் எப்படிக் கற்பனைசெய்து இந்த விக்ரர் விசேட கவச எதிர்ப்பு அணியை உருவாக்கினாரோ, அந்தக் கனவில் சிறிதும் பிசிறல் இல்லாமல் நினைத்ததை அப்படியே தனது அணியைவைத்து அக்பர் செய்து முடித்தான். இரும்புக் கவசத்தின் வலிமையைச் சிதைத்து விடுதலைப்போராளிகளின் வலிமையை உலகிற்குக் காண்பித்தான்.

அக்பர் இப்படிப்பல பணிகளைப் புரிந்தான். பின்னாளில் பல அணிகளை இணைத்தும், பல நவீன ஆயுதங்களை உள்ளடக்கியதுமான அணிகளையும் அக்பர் வழிநடத்தினான். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் மட்டக்களப்பின் ஆண்டாங்குளப் பொறுப்பாளராகத் தலைவரின் விசேட பணிப்பின் பேரில் சென்று பணிபுரிந்தான். களப்பணியையும் மக்கள் பணியையும் ஒன்றாகச் செய்தான். தூர இடங்களுக்குக்கூட கால்நடையாகச் சென்று வேவுபார்த்துத் தாக்குதல்கள் மேற்கொள்வது, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது என அவன் எப்போதும் இயங்கிக்கொண்டிருந்தான். ஒரு தளபதியாய் இருந்தபோதும் ஒரு சாதாரண போராளியாகவே தன்னை கருதிக் கொள்வதும் ஏற்றத்தாழ்வு இன்றி எல்லோரையும் மதித்து நடப்பதும் பண்பான வார்த்தைகளால் கதைப்பதும் புன்சிரிப்பை மெல்லியதாய் பரவவிடுவதும் அவனுடன் கூடப்பிறந்த குண இயல்புகள்.

இந்த வீரன் 23.05.2005இல் தமிழீழத் தேசியத் துணைப்படையின் வடபோர்முனைக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டான். அன்றிலிருந்து முன்னணி நிலைகளுள் அவர்களுடன் வாழ்ந்து ஒரு சிறந்த படையாக அதை உருவாக்கினான். 11.08.2006இல் முகமாலையில் எதிரி முன்னேறியபோதும், தொடர்ந்துவந்த சண்டைகளிலும் தேசியத் துணைப்படை எதிர்பார்த்ததிலும் அதிகமாய் அல்லது எதிர்பார்க்காத வகையில் சண்டையிட்டதாயின் அதன் ஆணிவேராய் இருந்தது அக்பர்தான். அக்பர் கட்டளை வழங்கினால் அவர்கள் சாதிப்பார்கள், அல்லது சாதனைக்காய் மடிவார்கள். அக்பர் அப்படித்தான் வாழ்ந்தான்.

இந்த வீரன்தானே எதிரியின் எறிகணை வீச்சில் எங்களை விட்டுப்பிரிந்து போனான். அவனுடன் கூடப்போன சாதுரியனும் அன்று மடிந்தான். அக்பரின் பிரிவு தளபதிகளில் இருந்து போராளிகள் வரை எல்லோரின் இதயத்தையும் ஒருமுறை உலுப்பி விழிகசிய வைத்தது. அக்பர் என்ற பெயருக்கு களத்தில் ஒரு வலிமை இருந்தது. ஒவ்வொரு ஆர்.பி.ஜி கொமாண்டோ வீரனின் வலிமையும் அக்பர்தான். அந்த வீரனின் நினைவுகளைச் சிறப்புத் தளபதிகளுடன் பகிர்ந்துகொண்டபோது அவன் ஒரு களஞ்சியமாய்த் தோன்றினான்.

அக்பர் ஒரு பண்பான போராளி, பெருந்தன்மையில்லாது பெரிய சாதனைகளைப் படைத்த சுத்தவீரன். தலைவன் நினைத்ததைச் செய்துமுடித்தவன், எச்சந்தர்ப்பத்திலும் எந்த வளப்பற்றாக்குறையிலும் பெரிய வேலைகளையும் அமைதியாய் செய்துமுடிப்பவன். சொல்வதைச் செய்வான், செய்வதைச் சொல்ல மாட்டான். இரும்பின் வலிமையை மிஞ்சிய தந்திரசாலி. எல்லாவற்றிற்கும் மேலாய் அக்பர் எங்களின் இராணுவச் சொத்து.

இத்தனை செயற்திறன் மிக்க வீரன் எங்களுக்குள் சத்தமில்லாமல் நடமாடித்திரிந்தான். களத்திலே இப்போதும் அவன் நிறையச் செய்யத்துடித்தான். உறங்குநிலையில் இருந்த ஆர்.பி.ஜி அணியை மீண்டும் இயங்குநிலைக்குக் கொண்டுவந்து பாரிய நடவடிக்கை ஒன்றினை முறியடிக்கும் முன்னாயத்தச் செயற்பாட்டின்போது அவன் மடிந்துபோனான். ஆயினும் அந்தப் பெயரின் வலிமை இப்போதும் இருக்கிறது. அக்பர் வீழ்ந்தபின்னும் அவன் வளர்த்த போராளிகள் எதிரியின் டாங்கிகளை நொருக்கினார்கள். “தலைமைத்துவத்தின் பண்பு என்பது அவன் உயிருடன் இருக்கும் போது மட்டுமல்ல, அவன் வீழ்ந்துவிட்ட பின்பும் அவனின் கட்டளைகளை நிறைவேற்றுவதுதான் அவன் தேடிவைத்த சொத்து” அக்பர் இந்தச் சொத்தை அதிகம் தேடிவைத்திருக்கிறான்.

கடைசியில், அக்பருக்கு ஒரு ஆசையும் ஆதங்கமும் இருந்தது. அக்பர் திருமணம் செய்து இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான போராளி. அவன் களங்களிலேயே அதிகம் வாழ்ந்தவன். தன் குழந்தைகளோடு கொஞ்சிவிளையாட அவனுக்கு நேரம் கிடைத்தது குறைவு. எங்காவது ஒரு பொழுதில் வீட்டிற்குச் சென்றாலும் தங்கி நிற்கமாட்டான். துணைவி மறிப்பாள். அவளின் வேண்டுகை அவனுக்குப் புரியும். அவளைத் தலைவரின் படத்திற்கு முன் கூட்டிவருவான். தலைவரின் படத்தைக்காட்டி, “அண்ணை நிறைய எதிர்பார்க்கிறார். அண்ணையைப்போல நாங்களும் செயற்படவேணும். பட்ட கஸ்ரங்களோடு சேர்ந்து எல்லாரும் கஸ்ரப்பட்டா கெதியில விடிவு கிடைக்கும். விடிவு கிடைச்சா என்ர குழந்தைகளோட செல்லங்கொஞ்சி அவையள நான் வடிவா வளர்ப்பன்தானே” என்று கூறிவிட்டுப் போய்விடுவான். அப்படியே அவன் போய்விட்டான். தனக்கென்று வாழாத இந்த உன்னத வீரனின் கடைசி ஆசைப்படி அவனின் குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்தை நாம்தானே போராடிப் பரிசளிக்க வேண்டும்.



எங்காவது ஒரு பொழுதில் வீட்டிற்குச் சென்றாலும் தங்கி நிற்கமாட்டான். துணைவி மறிப்பாள். அவளின் வேண்டுகை அவனுக்குப் புரியும். அவளைத் தலைவரின் படத்திற்கு முன் கூட்டிவருவான். தலைவரின் படத்தைக்காட்டி, “அண்ணை நிறைய எதிர்பார்க்கிறார். அண்ணையைப் போல நாங்களும் செயற்படவேணும். பட்ட கஸ்ரங்களோடு சேர்ந்து எல்லாரும் கஸ்ரப்பட்டா கெதியில விடிவு கிடைக்கும். விடிவு கிடைச்சா என்ர குழந்தைகளோட செல்லங்கொஞ்சி அவையள நான் வடிவா வளர்ப்பன்தானே” என்று கூறிவிட்டுப் போய்விடுவான். அப்படியே அவன் போய்விட்டான். தனக்கென்று வாழாத இந்த உன்னத வீரனின் கடைசி ஆசைப்படி அவனின் குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்தை நாம்தானே போராடிப் பரிசளிக்க வேண்டும்.




www.eelamview.com

# எழுதும் வரிகளே உருகிக்கசியும் கவிதை இவர்

கொஞ்சம் முன்னர் வரையும்
இடியோடு இறங்கிய மழை
கொஞ்சம் ஆற
தூறல் போடுகிறது வானம்.
இப்போ பின்னேரம்
சந்தியா காலம்
மீண்டும் இடிமழைக்கான
அறிகுறியெறிகிறது
இருண்டிருக்கும் மேகம்.
ஊர்திரண்டு வரிசைகட்டி நிற்கிறது
பிள்ளைகள் உறங்கும்
தொட்டில்கள் முன்னே.
கார்த்திகை நாளின் கடைதிறவு காண
உருத்துடையோர் காத்திருக்கின்றனர்.
நேரம் நொடிகளாய்க் கரைய
ஒவ்வொருவராய்
வெளியேறி வருகின்றனர்.
தோழர்களே!
தோழியரே!
வழக்கமாகக் கல்லறை
வாசல் திறந்ததும்
ஓடிவந்து கைபற்றிப்
புன்னகைப்பீர்களே
வருடமொன்றின் மௌனம் கலைய
வார்த்தைகள் கொட்டிப்
புன்னகைப்பீர்களே
இன்றேன் சிரிக்காமலும்
ஏதும் பேசாமலும் ஏமாற்றுகின்றீர்?
கோபமா தோழர்களே
கோபமா தோழியர்களே
உங்கள் 'தாகம் தணிக்காப் பாவியர்'
என்றா
இத்தனை எடுத்தெறிவு?
ஈழத்தமிழருக்கு நிமிர்வையும்
ஆயிரம்கோடி
சூரியவெளிச்சமும் நல்கிய
மானப்பிறவிகளே
மறப்போமா உம்மை?
கூட்டுக்குள் கிடந்து குமைகிறது உயிர்
பூவள்ளிப் போட்டே
புண்ணாச்சு கைகள்
அழுதழுது நீர்வற்றிப் போனது
விழிக்கிணறு.
கண்மலரும் காலை ஒவ்வொன்றும்
வீரச்சாவுச் செய்தியுடன்தானே
விடிகிறது.
இமை மூடும்பொழுதும்
இடிவிழுத்திய செய்தியுடன்தானே
இருள்கிறது.
நிலவு முகம் திருத்திய பூங்குஞ்சுகளை
இழவு எடுத்துச் செல்கிறது நாளாந்தம்.
இன்னும் எத்தனை
காலத்துக்கென்றுதான் இது?

பத்துப்பரப்பில்
விதைக்கத் தொடங்கிய வயல்
இன்று ஏக்கர் கணக்காக நீள்கிறது.
விதைக்கக் குழிதோண்ட
வியர்க்கிறது நிலம்.
காற்றின் விழிகளிலும் கண்ணீர்.
வெள்ளையடித்த கல்லறைக்குள்ளே
பள்ளிகொள்கின்றனர் பரமாத்துமாக்கள்.
நூல்பிடித்தோடிய நேராய்
வரிசையான நாற்றுநடுகை
முளைக்குமென்ற எதிர்பார்ப்புப்
பொய்க்கவில்லை
கங்கும் கணையுமாக எங்கும் அரும்புகள்.
ஒருநாள் வந்து
உள்ளே புகுந்து பூவைத்துப் பாரும்.
குழியிருந்து கேட்கும் குரல்
பார்க்கும் விழி
துடிக்கும் உயிர்.
எவர் சொன்னது இவர்களை
இறந்து போனவரென்று?
எவர் சொன்னது
எலும்புமுக்கி எருவானாரென்று?
வெளியே வருவதில்லையேதவிர
குழிகளுக்குள்ளே இவர்களின்
இராஜாங்கமே நடக்கிறது.
கார்த்திகை இருபத்தியேழு
தேசத்துக்கு உயிர்ப்பெழுதும் நாள்.
சில்லிட்டுப்போகும் நிலம்
பூக்கொண்டு நடப்போம் புனிதரிடம்
அருகணைந்து கல்லறை கழுவுவோம்
கண்ணீரால்.
நெய்விளக்கேற்றும் நேரம்
செல்வங்கள் விழிதிறப்பர்
செவி கேட்கச் சிரிப்பர்
மௌனமொழியில்
பெற்றமனம் குளிரப் பேசுவர்
அதில் ஆயிரம் அர்த்தங்கள் அவிழும்.
''மொழியாகி எங்கள் மூச்சாகி'' என்று
என்புருக வழியும் பாடலில்
சிலிர்த்துப் போய்ச் சிலையாவோம்.
''பணிமுடித்து உறங்குகின்றோம்
மீதிவழி முன்செல்வீர்'' என
தேவகுமாரரின் அசரீரி கேட்கும்.
எமக்கானது பூவல்ல
எமக்கானது சுடரல்ல
எமக்கானது இந்தப் பாடலுமல்ல.
எமக்கானது விடுதலை
எமக்கானது தேசத்தின் விடிவு.
காற்றேறும் இந்தப் பேரொலியுடன்
கல்லறைகள் மூடிக்கொள்ளும்.
ஒளிபெறும் திசையில்
பாதை தெளிவுறும்.
வாசல்கடந்து வெளியேவர

நிலம் விடிந்திருக்கும்.
எழுதும் வரிகளே உருகிக் கசியும்
கவிதை இவர்.
அடையாளமற்றிருந்த இனமொன்றின்
முகவரி இவர்.
விதி வலியதல்ல
வலியதே விதியாகிறது என
எழுதிய புதுவிதி இவர்.
பிறப்புக்கு இறப்பால் அர்த்தம் சொல்லி
சிறப்புற்ற சீவன்முத்தர்கள் இவர்கள்.
தலைசாய்த்து வளைந்தாடுவதே
வாழ்வெனக் கருதும்
நாணற்புற்களிடையே
நிமிர்ந்தெழும் வழியுணர்த்தியோர்
இவர்கள்.
எப்படியென்றும்
எங்கணம் சாத்தியமானதென்றும் அறிய
நாளைய ஆய்வுக்காரர்களுக்காக
நடப்பட்டுள்ள
கல்வெட்டுக்கள் இவர்கள்.
நேற்று இருந்ததெனவும்
இடையில் இல்லாதழிந்ததெனவும்
மீண்டும் இன்று முளைத்ததெனவும்
சொல்லப்படும் இனமானத்தினதும்
வீரத்தினதும் சொந்தக்காரர்கள்
இவர்கள்.
அறியப்பட்டனவாகவும்
அதிகம் அறியப்படாதனவாகவும்
கல்லறை கிடக்கும்
காலச்சாட்சிகள் இவர்கள்.
வீரத்தின் மணிமுடிதரித்து
ஒருகாலம் இப்படியும்
இருந்தோமெனச் சொல்லி
புதைக்கப்பட்ட
காலப்பெட்டகங்கள் இவர்கள்.
நாங்கள் படைகொண்ட பரம்பரை என
மீண்டும் நிறுவிய மகுடர்கள் இவர்கள்.
சாவு வாழ்வின் முடிவல்ல
தொடக்கமுமாகலாமெனச் சொல்லி
வாழ்வுக்குப் புதிதான
வழிகாட்டிகள் இவர்கள்.
கார்த்திகை மாதத்தில் பூப்பதால்
மற்றவர்களில் இருந்து மாறுபட்டு
அதிசயமாய் விளைவதால்
கானகத்தில் கரைந்துறைவதால்
கழுத்தில் நஞ்சணிவதால்
மஞ்சளும் சிவப்புமாய் மலர்வதால்
கார்த்திகைப்பூவே
மாவீரர்களுக்குக் கனகச்சிதமானது.
கார்த்திகைப்பூவே இவர்
இவரே கார்த்திகைப்பூ.
மாவீரர்நாள் கார்த்திகைப்பூ
பூத்திடும்நாள்.



-வியாசன்-

www.eelamview.com



# 2006 மாவீரர் நாளன்று தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை

அரசு கனவுகாண்கிறது. ஆனால், இந்த ஐந்து ஆண்டுக்கால அமைதி முயற்சியில் இந்த அக்கினிப் பரீட்சையில் நாம் எரிந்துபோய்விடவில்லை; அழிந்துபோய்விடவுமில்லை. மாறாக, நாம் இந்த வேள்வித்தீயிற் புடம் போடப்பட்டு, புதிய புலிகளாகப் புதுப்பொலிவுடன் எழுந்துநிற்கிறோம். தமிழரின் பலமும் வளமும் ஒன்றுகுவிந்து, பலம்மிக்க, வலுமிக்க ஒரு பராக்கிரமச் சக்தியாக எழுந்துநிற்கிறோம். இந்த இமாலயச் சக்தியின் ஊற்றுவாய்கள் எமது மாவீரர்கள் என்பதை இந்நாளில் நான் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனது அன்பார்ந்த மக்களே!

எமது வீரவிடுதலை வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையில் நாம் இன்று நிற்கிறோம். மிகவும் நீண்ட, கடினமான, நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கிறோம். உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத சவால்களை, எதிர்பாராத திருப்பங்களை எதிர்கொண்டு நிற்கிறோம். வரலாற்றில் என்றுமில்லாதவாறு போரையும் பேச்சையும் சமகாலத்திலே சந்தித்து நிற்கிறோம்.

போருக்கு ஓய்வுகொடுத்து, சமாதான வழியிற் சமரசப் பேச்சுக்கள் வாயிலாக எமது மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நாம் நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும் முயற்சித்து ஆறு ஆண்டுகள் அசைந்தோடிவிட்டன. நாம் அமைதிகாத்த இந்த ஆறு ஆண்டு காலத்தில் இந்த நீண்ட காலவிரிப்பில் தணியாத நெருப்பாக எரிந்துகொண்டிருக்கும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டதா? தமிழரைச் சதா கொடுமைப்படுத்திக் கொன்றொழித்துவரும் சிங்கள ஆட்சியாளர்களின் மனவுலகில் மாற்றம் நிகழ்ந்ததா? தமிழரின் நீதியான நியாயமான கோரிக்கைகள் எவையும் நிறைவேற்றப்பட்டனவா? ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனங்களால் நாள்தோறும் அவலத்திற்கும் இம்சைக்கும் ஆளாகிநிற்கும் எம்மக்களுக்கு நிம்மதி கிடைத்ததா? எம்மக்களை நாளாந்தம் அழுத்திவரும் அன்றாட அவசியப் பிரச்சினைகள் தானும் தீர்த்துவைக்கப்பட்டனவா? எதுவுமே நடக்கவில்லை. மாறாக, எத்தனையோ கனவுகளோடு எத்தனையோ கற்பனைகளோடு நீதி கிடைக்குமெனக் காத்திருந்த தமிழருக்குச் சாவும் அழிவுமே பரிசாகக் கிடைத்திருக்கிறன. சோதனை மேற் சோதனையாக, வேதனைமேல் வேதனையாகத் தாங்கமுடியாத துயரச்சுமை தமிழர்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இந்த வேதனையால் அழுதழுது கண்ணீர் தீர்ந்து, இரத்தமே கண்ணீராக வருகின்ற சோகம் தமிழினத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. மொத்தத்தில் இந்த அமைதிக்காலம் தமிழர் வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத இரத்தம் தோய்ந்த இருண்ட காலமாக மாறியிருக்கிறது.

அமைதி போதித்த உலகநாடுகள் மௌனத்திற்குள் தமது மனச்சாட்சியைப் புதைத்துவிட்டு, கண்களை மூடிக்கொண்டு அமைதியாக இருக்க, தமிழர் மண்ணில் பெரும் மனித அவலம் இன்று அரங்கேறிவருகிறது. பிரதான வழங்கற் பாதைக்கு மூடுவிழா நடாத்திய சிங்கள அரசு, தமிழரை அவர்களது சொந்த மண்ணிலேயே சிறைவைத்திருக்கிறது. எமது மக்களின் சுதந்திரத்தைப் பறித்து, அவர்களது சமூக வாழ்வைத் துண்டித்து, நான்கு சுவர்களுக்கு மத்தியில் அவர்களைத் தடுத்துவைத்து, அவர்களது நடமாட்டத்திற்குக் கட்டுப்பாடுகளைப் போட்டுக் கொடுமைப்படுத்துகிறது. தமிழரின் தாயகத்தைப் பிரதேசங்களாகப் பிரித்து, வலயங்களாக வகுத்து, இராணுவ அரண்களை அமைத்து, முட்கம்பி வேலிகளால் விலங்கிட்டு, சோதனைச் சாவடிகளால் நிறைத்து, ஒரு பிரமாண்டமான மனித வதைமுகாமாக மாற்றியிருக்கிறது.

இராணுவ அழுத்தம், பொருளாதார நெருக்குதல் என இரு முனைகளில் எமது மக்கள்மீது சிங்கள அரசு யுத்தத்தை ஏவிவிட்டிருக்கிறது. வகைதொகையற்ற கைதுகள், சிறைவைப்புக்கள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள், கொலைகள், காணாமற்போதல்கள், எறிகணை வீச்சுக்கள், விமானக்குண்டு வீச்சுக்கள், தொடர்ச்சியான போர் நடவடிக்கைகள் என எம் மக்கள்மீது இராணுவ அழுத்தம் என்றுமில்லாதவாறு இறுக்கமாக்கப்பட்டிருக்கிறது. மக்கள் வாழிடங்கள் இராணுவ அரண்களாலும் படைநிலைகளாலும் நிரப்பப்படுகின்றன. மறுபுறத்தில் உணவுத்தடை, மருந்துத்தடை, பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை, மீன்பிடித்தடை என எம்மக்கள் உயிரோடு வாட்டி வதைக்கப்படுகிறார்கள்.

போர்நிறுத்தம் செய்து, சமாதானப் பேச்சுக்கள் நடாத்தி, ஐந்து ஆண்டுகள் அமைதி காத்தபோதும் எம்மக்களுக்குச் சமாதானத்தின் பலாபலன்கள் எவையுமே கிட்டவில்லை. அவர்களது வாழ்வு இருண்டு போய் நரகமாக மாறியிருக்கிறது. தாங்கமுடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளின் சுமை எம்மக்களை வாட்டிவதைக்கிறது, தொடரும் போரினால் எமது மக்கள் மிகவும் அவசரமான வாழ்நிலைத் தேவைகளையும் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டுநிற்கிறார்கள். பல்லாயிரம் மக்கள் தமது சொந்த வீடுகளிலிருந்து குடிபெயர்க்கப்பட்டு, நோயும் பிணியும் பசியும் பட்டினியும் வாட்ட அகதி முகாங்களில் அல்லற்படுகிறார்கள். எம்மக்களது உயிர்வாழ்விற்கான உணவையும் மருந்தையும் மறுத்து, பாதையைப் பூட்டி, பட்டினி போட்டுப் படுபாதகம் புரியும் சிங்கள அரசு எம்மக்களுக்குக் கருணை காட்டி, காருண்யம் செய்து, அரசியல் உரிமைகளை வழங்கிவிடும் என யாரும் எதிர்பார்க்கமுடியாது. அப்படி எதிர்பார்ப்பது அரசியல் அசட்டுத்தனமே அன்றி வேறொன்றுமன்று.

அசுர வேகத்தில் வளர்ந்துவரும் அறிவியலும் அதனால் எழுந்த புதிய உலகப் பார்வையும் மனிதனை ஒரு புதிய யுகத்திற்கு இன்று இட்டுச்செல்கிறன. இந்த அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, கால மாற்றத்திற்கு ஏற்ப, சமூகப் பண்பாட்டுப் புறநிலைகளுக்கு ஏற்ப சிந்தனை உலகமும் மாற்றங்களைச் சந்திக்கிறது. ஆனால், சிங்களத் தேசத்திலே அதன் சிந்தனை உலகிலும் சரி, அதன் சமூக உலகிலும் சரி எதுவித மாற்றமும் நிகழவில்லை. சிங்களத் தேசம் புதிய காற்றைச் சுவாசித்து, புதிதாகச் சிந்திக்க மறுக்கிறது.



பண்டைய இதிகாசங்கள் புனைந்துவிட்ட புரளிகளாற் சிங்கள இனம் வழிதவறிச்சென்று தொடர்ந்தும் பேரினவாதச் சகதிக்குள் வீழ்ந்து கிடக்கிறது. இதனால், சிங்களப் பௌத்தப் பேரினவாதம் இன்றொரு தேசியச் சித்தாந்தமாகச் சிங்களத் தேசத்தில் மேலாதிக்கம் செலுத்தி வருகிறது. இந்தக் கருத்தாதிக்கம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களிலிருந்து பத்திரிகைத்துறை வரை ஊடுருவி நிற்கிறது. மாணவர்களோ புத்திஜீவிகளோ எழுத்தாளர்களோ அரசியல்வாதிகளோ சுயமாகச் சிந்திக்கமுடியாதவாறு சிங்கள மூளையத்தை இந்தக் கருத்தாதிக்கம் சிறைப்பிடித்து வைத்திருக்கிறது. பௌத்தப் பேரினவாதக் கருத்துக்கள் சிங்கள மனிதனின் மனவமைப்பின் ஆழத்தில் அழியாத கோடுகளாகப் பொறித்துவிடப்பட்டிருக்கிறன. இதனால், சிங்களத்தேசம் போர்வெறி பிடித்துச் சன்னதமாடுகிறது; போர்முரசு கொட்டுகிறது.

தமிழரின் தேசியப் பிரச்சினையை நாகரீகமாக அமைதி வழியில் தீர்க்க அது முயற்சிக்கவில்லை. உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்தித் தமிழரைப் பட்டினிபோட்டு அழித்தொழிக்கவே அது விரும்புகிறது. வன்முறைகளைத் தூண்டி, போரைத் தீவிரப்படுத்தி, தமிழரை அடிமைகொண்டு ஆளவே அது கங்கணங்கட்டி நிற்கிறது. காலியில் தமிழர் தாக்கப்பட்டமையும் இதனையே எடுத்துக்காட்டுகிறது.

எமது விடுதலை இயக்கமும் சரி, எமது மக்களும் சரி என்றுமே போரை விரும்பியதில்லை. வன்முறைப் பாதையையும் விரும்பியதில்லை. நாம் சமாதானத்தையே விரும்புகிறோம். சமாதான வழிமுறை தழுவி, அமைதிவழியில் எமது மக்களின் அரசியல் உரிமையை வென்றெடுக்க நாம் என்றுமே தயங்கியதுமில்லை. இதனால்தான் திம்புவில் தொடங்கி, ஜெனீவா வரை பல்வேறு தடவைகள் பல்வேறு காலகட்டங்களிற் பல்வேறு நாடுகளிற் பேச்சுக்களை நடாத்தியிருக்கிறோம். நோர்வேயின் அனுசரணையோடும் சர்வதேசச் சமூகத்தின் ஆசீர்வாதத்தோடும் உலக நாடுகளின் தலைநகரங்களில் நடந்துவரும் தற்போதைய சமாதான முயற்சி அடிப்படையில் வித்தியாசமானது.

இற்றைக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவராக இருந்த திரு. எரிக் சொல்கெய்ம் ஐப்பசி 31 2000ஆம் ஆண்டு வன்னிக்கு அமைதிப்பயணம் மேற்கொண்டு எம்மைச் சந்தித்ததோடு இந்தச் சமாதானப் பயணம் ஆரம்பமாகியது. இது வித்தியாசமான காலத்தில் வித்தியாசமான வரலாற்றுச்சூழலில் வித்தியாசமான வடிவத்தில் வித்தியாசமான பாதையில் பயணிக்கிறது. அமைதிக்கான முன்னெடுப்புக்கள் ஒருபுறமாகவும் சிங்கள அரசின் ஆக்கிரமிப்புப் போர்நடவடிக்கை மறுபுறமுமாகவும் இரு தளங்களிலே நகர்கிறது. தமிழரின் குருதியைக் குடித்து, தமிழரின் எண்ணற்ற உயிர்களைக் காவுகொண்டு, காலத்தால் உப்பிப்பெருத்து வெடிப்பதற்குத் தயாராகத் தருணம் பார்த்து நிற்கிறது.

நாம் அமைதிகாத்த ஆறு ஆண்டுக் காலத்திலே சமாதான நடவடிக்கைகளில் நீதியாகவும் நேர்மையாகவும் நடந்துகொண்டோம். சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களையும் முன்முயற்சிகளையும் நாமே முதலில் மேற்கொண்டோம். முதன்முதலாகப் போர்நிறுத்தத்தை ஒருதலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்தி, நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு ஆக்கபூர்வமான நல்லெண்ண நடவடிக்கைகளை மேற்கொண்டு சமாதானத்திற்கான உறுதியான அத்திவாரத்தை அமைத்தோம். பேச்சுக்களில் நியாயமற்ற நிபந்தனைகளையோ நிர்ப்பந்தங்களையோ போடாது வரம்புகளையோ வரையறைகளையோ விதிக்காது காலக் கட்டுப்பாடுகளைத் திணிக்காது அமைதி முயற்சிகளை முன்னெடுத்தோம். இவற்றை நாம் பலவீனமான நிலையில் நின்று மேற்கொள்ளவில்லை. வன்னிப் பெருநிலப்பரப்பையும் இயக்கச்சி-ஆனையிறவுக் கூட்டுப்படைத்தளத்தையும் மீட்டெடுத்தோம். சிங்கள இராணுவத்தின் அக்கினிகீல முன்னேற்ற நடவடிக்கையை முறியடித்தோம். உலகின் போரியல் வரலாற்றில் மகத்தான சாதனைகளைப் புரிந்து, இராணுவ மேல்நிலையில் நின்றுகொண்டே இத்தனையையும் மேற்கொண்டோம்.

தென்னிலங்கையிலோ நிலைமை முற்றிலும் வேறாக இருந்தது. தோல்வி மேல் தோல்வியைப் பெற்று, போரிடும் மனோநிலை குலைந்து, இராணுவத்தின் முதுகெலும்பு உடைந்து, நாட்டின் பொருளாதாரம் படுத்துத் தள்ளாடிய நிலையிலேயே சிங்களத் தேசம் சமாதானப் பேச்சிற்குச் சம்மதித்தது. இந்தச் சமாதான முயற்சி ஆரம்பித்ததிலிருந்து இற்றைவரையான ஐந்து ஆண்டுக் காலத்தில் ரணில், சந்திரிகா, மகிந்த என மூன்று அரசுகள் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கின்றன. ஒவ்வொரு தடவையும் ஆட்சிகள் மாறமாற சமாதான முயற்சிகளும் ஒரு சிறையிலிருந்து மீட்கப்பட்டு இன்னொரு சிறைக்குள் தள்ளப்பட்டன. சமாதானப் புறாவும் கூடுவிட்டுக் கூடுதாவியதே தவிர அதனால் சுதந்திரமாகச் சிறகடித்துப் பறக்கமுடியவில்லை. கூட்டுப்பறவையாகிக் கூட்டுக்குள்ளேயே குத்தப்பட்டு இன்று குற்றுயிராகக் கிடக்கிறது.

முதலில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் போர்நிறுத்த ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டு ஆறுமாதங்கள் அமைதிப்பேச்சு நடாத்தினோம். கடந்த அரசுகளைப் போலவே ரணில் அரசும் வழங்கிய வாக்குறுதிகளையும் நிறைவேற்றாது, ஏற்றுக்கொண்ட ஒப்பந்த விதிகளையும் கடப்பாடுகளையும் செயற்படுத்தாது காலத்தை இழுத்தடித்தது. ஒப்பந்த விதிகளுக்கமைய மக்களது வாழிடங்கள், வழிபாட்டிடங்கள், பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளிலிருந்து தமது படைகளை விலக்கிக்கொள்ளாது, அவற்றை உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி, மக்கள் தமது வாழிடங்களுக்குத் திரும்புவதற்கு நிரந்தரமாகத் தடைபோட்டது. போர் நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான உபகுழுவும் முழுமையாகச் செயலிழந்தது. இதேபோன்று எம்மக்களின் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட உபகுழுவும் அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளாற் செயலிழந்து செத்துப்போனது.

எமது மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க மறுத்த ரணில் அரசாங்கம் எமது விடுதலை இயக்கத்தை உலக அரங்கிலே ஒதுக்கி, ஓரம்கட்டுகின்ற வேலையையும் இரகசியமாக மேற்கொண்டது. தமிழர் தாயகத்தில் ஒரு முறையான நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு முன்னரே உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகளைக் கூட்டி, உதவிப் பணத்தைப் பெற்று, தென்னிலங்கையைக் கட்டியெழுப்பவும் திட்டம்போட்டது. இலங்கைக்கு உதவி வழங்குவதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட வாஷிங்ரன் மாநாட்டில் நாம் பங்குபற்றுவதற்கான வழிவகைகளைச் செய்யாது எம்மை உலகநாடுகளின் மத்தியில் அந்நியப்படுத்தி, அவமானப்படுத்தியது. இதனால், ரோக்கியோ மாநாட்டை நாம் புறக்கணிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோம். இத்தோடு நின்றுவிடாது, சில உலகநாடுகளின் உதவியோடு எமக்கு எதிரான பாதுகாப்பு வலையைக் கட்டியெழுப்பி, அதற்குள் எமது சுதந்திர இயக்கத்தைச் சிக்கவைத்து அழித்தொழிக்கவும் ரணில் அரசாங்கம் சதித்திட்டம் தீட்டிச் செயற்பட்டது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான வரைபை நாம் முன்வைத்தபோது தென்னிலங்கையிலே அதிரடி அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது. எமது வரைபின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க மறுத்ததோடு ஒட்டுக் குழுக்களை அரங்கேற்றி புதிய வடிவிற் புலிகளுக்கு எதிரான நிழற்போரை அவர் தீவிரப்படுத்தினார். இந்த ஆயுதக் குழுக்களின் அராஜகத்தால் தமிழர் தாயகம் வன்முறைக் களமாக மாறியது. அறிவுஜீவிகள், அரசியல்வாதிகள், ஆதரவாளர்கள், பத்திரிகையாளர்கள், போராளிகள், அப்பாவிப் பொதுமக்கள் எனப் பலரும் கொல்லப்பட்டனர். போர்நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கமைய அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எமது போராளிகள் ஆற்றிய அரசியற் பணிகளையும் இடைநடுவில் நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. இதனால், எமது மக்கள் இராணுவத்தின் பிடியில் தனித்துவிடப்பட்டார்கள். இறுதியாகச் சுனாமியாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கெனக் கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பையும் சந்திரிகா அரசு செயற்படுத்தவில்லை. முழுக்கமுழுக்க மனிதாபிமான நோக்கங்கொண்ட இந்தப் பொதுக்கட்டமைப்பை ஒற்றையாட்சி அரசியலமைப்பின் வரையறைகளைக் காட்டிச் சிங்களப் பேரினவாத நீதிமன்றம் நிராகரித்தது. இதனால், ஆழிப்பேரலை தாக்கிய மக்களின் வாழ்வுநிலைதான் மோசமடைந்துநிற்கிறது. இதன்மூலம் சிங்களப் பேரினவாதம் எத்துணை மோசமானது என்பதை உலகம் கண்டுகொண்டிருக்கும் என நான் நம்புகிறேன்.

இந்தச் சூழமைவில்தான் கடந்த ஆண்டு நடந்த அரசுத் தலைவர் தேர்தலிற் சிங்களத் தேசம் தமது புதிய தலைவராக மகிந்த ராஜபக்சவைத் தேர்வுசெய்தது. அவரும் கடந்தகாலச் சிங்களத் தலைமைகளைப் போன்று இராணுவப் பலத்திலும் இராணுவ அணுகுமுறையிலும் இராணுவவழித் தீர்விலுமே நம்பிக்கைகொண்டு செயற்படுகிறார். தமிழ்மக்களது தேசியப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வுகாணுமாறு கடந்த ஆண்டு மாவீரர் நினைவுரையில் நான் விடுத்த இறுதியான உறுதியான அவசர வேண்டுகோளையும் நிராகரித்துக் கடும்போக்கைக் கடைப்பிடித்துக் காலத்தை இழுத்தடித்துவருகிறார். புலிகளை அழிக்கும் இலக்குடன் ஒருபுறம் போரைத் தீவிரமாக முடுக்கிவிட்டு, மறுபுறம் சமாதானவழித் தீர்வுபற்றிப் பேசுகிறார். போரும் சமாதானமும் என்ற இந்த இரட்டை அணுகுமுறை, அடிப்படையிலேயே தவறானது. எந்தப் போராட்டச் சக்தியுடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமோ அந்தப் போராட்டச் சக்தியை அந்நியப்படுத்தி அழித்துவிட்டு, பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் என்பது என்றுமே நடக்கப்போவதில்லை. இது சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் அசட்டுத்தனமேயன்றி வேறொன்றுமன்று.

மகிந்தவின் அரசு படைப்பலத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழரின் தலைவிதியை நிர்ணயிக்க விரும்புகிறது. தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து, அதன்மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று தான் விரும்பும் அரைகுறைத் தீர்வைத் தமிழர் தலையிற்

(உரையின் தொடர்ச்சி 12ஆம் பக்கத்தில்)



www.eelamview.com

# 2006 மாவீரர் நாளன்று தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை



2005 மாவீரர் நாளில்...

கட்டிவிட எண்ணுகிறது. இந்தப் போர்முனைப்புச் செயற்பாட்டாற் போர் நிறுத்த ஒப்பந்தம் செத்துச் செயலிழந்துபோய்க் கிடக்கிறது. ஒப்பந்தம் கிழிக்கப்படாமலேயே உக்கிப்போன தாளாகி உருக்குலைந்து கிடக்கிறது. புலிகளின் இலக்குகளுக்கு எதிராக மும்முனைகளிலும் தாக்குதல் தொடரும் என அறிவித்து, மகிந்த அரசு ஒப்பந்தத்திற்கு ஈமைக்கிரியை களையும் நடாத்தி முடித்திருக்கிறது.

மகிந்தவின் போர்த்திட்டம் தரைப்போருடன் நிற்காது வான், கடல் என மும்முனைகளிலும் நீண்டு விரிந்திருக்கிறது. இதன்மூலம் மகிந்த அரசு தமிழின அழிப்புப் போருக்கு முழுவடிவம் கொடுத்திருக்கிறது. தமிழர் தாயகமெங்கும் எறிகணைகளையும் விமானக்குண்டுகளையும் வீசி இனக்கொலை புரிகிறது. ஆயுதக்குழுக்களைச் சுதந்திரமாகச் செயற் பட அனுமதித்து பெரும் கொலைக் கலாச்சாரத்தை அரங்கேற்றியிருக்கிறது. போர்நிறுத்தத்தை முறித்துக்கொண்டு மாவிலாறையும் சம்பூரையும் ஆக்கிரமித்து நிற்கிறது. தூரநோக்குடைய எதிர்காலப் போரியல் திட்டங் களுக்கு அமைவாக மாவிலாற்றிலும் சம்பூரிலும் நாம் மேற்கொண்ட தந்திரோபாயப் பின்வாங்கலைச் சிங்களப் படைத்துறை தவறாக எடை போட்டது. பாரிய படைக்கலச் சக்தியையும் சுடுகலச் சக்தியையும் ஒன்று குவித்து, தமிழரின் தாயகநிலங்களைச் சிங்கள அரசாட்சியின் கீழ்க் கொண்டுவரப் புதிய புதிய படையெடுப்புக்களை முடுக்கிவிட்டது. இதனால், தமிழர் மண் ரணகளமாக மாறியது.

இந்நிலையில்தான் நாம் சிங்களத் திற்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதென முடி வெடுத்தோம். கிளாலியிலும் முகமாலையிலும் முன்னேறிவந்த இராணுவத்தை எமது படை யணிகள் மின்னல் வேகத்தில் தாக்கியழித்தன. எதிரி என்றுமில்லாதவாறு இரத்தம் சிந்தினான். எதிரி இராணுவத்திற் பெருமளவானோர் உயிரி ழந்து, ஊனமடைந்தனர். சிங்களத்தின் இரா ணுவ இயந்திரம் ஓரிரு மணித்தியாலங்களில் வேரறுந்து விழுந்த விருட்சமாகச் சரிந்துகிடந்தது. சிறப்புப்படையணிகள் சிதைவுற்று முகமாலை யில் முன்னேற முடியாது முடக்கப்பட்டபோதும், சிங்கள அரசு தனது போர்த்திட்டத்தைக் கைவிட வில்லை. தொடர்ந்தும் இராணுவ வழியையே நாடிநிற்கிறது.

மகிந்தவின் அரசு தமிழ்மக்களை இனஅழிப்புச் செய்கின்ற அதேநேரம் அதன் இனஅழிப்புப் போரிலிருந்து தமிழ்மக்களைக் காக்கப் புலிகள் நடாத்துகின்ற ஆயுதப் போராட்ட த்தை அர்த்தமற்ற பயங்கரவாதமாகச் சித்தரித்தும் வருகிறது. தமிழரின் நீதியான போராட்டத்தைத் திரிபுபடுத்தி, இழிவுபடுத்தி உலகெங்கும் பொய் யான விசமப் பிரச்சாரங்களை முடுக்கிவிட்டிருக் கிறது. எமது மக்களின் ஏகோபித்த எதிர்ப்பையும் போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் ஆட் சேபத்தையும் பொருட்படுத்தாது இலங்கை அரசின் இராஜரீக அழுத்தங்களுக்குப் பணிந்து, அதன் பொய்யான பரப்புரைகளுக்கு மசிந்து ஐரோப்பிய ஒன்றியமும் கனடாவும் எமது விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டன. உலக அரங்கில் எம்மை வேண்டத்தகாதோராக, தீண்டத்தகாதோராகத் தனிமைப்படுத்தி, ஒதுக்கி, ஓரங்கட்டின.

நீதி நியாயங்களைச் சீர்தூக்கிப் பாராது, அவசரப்பட்டு எடுத்த இந்த முடிவு பாரதூரமான எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தி யுள்ளது. சிங்கள அரசோடு பேச்சுக்களில் எமக்கிருந்த சமநிலையையும் சமபங்காளி என்ற தகைமையையும் இது ஆழமாகப் பாதித்தது. விட்டுக் கொடாத கடும்போக்கைக் கைக்கொள்ளச் சிங்கள அரசை ஊக்கப்படுத்தி யது. கண்காணிப்புக்குழுவைப் பலவீனப்படுத்தி, சிங்கள அரசு தனது போர்த்திட்டத்தைத் தடையின்றித் தொடர வழிவகுத்தது. அத்தோடு அமைதி முயற்சிகளுக்கு உதவுவதாகக் கூறிக்கொள்ளும் சில உலகநாடுகள் சிங்களத்தின் இனஅழிப்புப் போரைக் கண்டிக்காது ஆயுத, நிதி உதவி களை வழங்கி, அதன் போர்த்திட்டத்திற்கு முண்டுகொடுத்து நிற்கின்றன. இப்படியான புறநிலையில்தான் மகிந்த அரசினால் தனது இராணுவப் படையெடுப்புக்களை துணிவுடனும் திமிருடனும் ஈவிரக்கமின்றியும் தமிழர் மண்ணில் தொடரமுடிகிறது.

மகிந்த அரசாங்கம் நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையிற் செயற்படவில்லை. அது பலாத்காரப் பிரயோகத்திலும் இராணுவவழித் தீர்விலும் நம்பிக்கை கொண்டிருப்பதாற் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இதனால் ஜெனீவாவில் நடந்த இரண்டு கட்டப் பேச்சுக்களும் எதுவித பயனுமின்றி முற்றுப்பெற்றன. முதலாம் கட்டப் பேச்சுக்களில் இராணுவமும் ஒட்டுக்குழுக்களும் ஒன்றோடொன்று கூட்டுச்சேர்ந்து கூட்டுச்செயற்றிட்டத்தில் செயற்படுவதை ஆதாரங்களோடும் அத்தாட்சிப் பத்திரங்களோடும் புள்ளிவிபரச் சான்றுகளோடும் சம்பவக் கோவைகளோடும் பேச்சுமேசையிலே முன்வைத்தோம். அவற்றை மறுக்கவோ மாற்றுக் காரணங்களைக் கூறவோ முடியாத இக்கட்டில், ஒட்டுக்குழுக்களைத் தமிழர் தாயகத்திலிருந்து அகற்றி, போர்நிறுத்தத்தைச் செம்மையாக அமுற்படுத்துவதாக அரசு ஒப்புதலளித்தது. அந்தப் பேச்சுக் களின் பின்னர், அரச வன்முறையும் அரச பயங்கரவாதமும் புதிய வேகத்தோடு – புதிய வீச்சோடு தமிழர் தாயகத்தைச் சுட்டெரித்ததே தவிர வேறெதுவும் நடக்கவில்லை.

இதேபோன்றுதான் ஜெனீவாவில் நடந்த இரண்டாம் கட்டப் பேச்சுக்களும் முற்றுமுழுதாகத் தோல்வியில் முடிந்தன. எமது மக்கள் அனுபவித்துவருகின்ற மாபெரும் மனிதாபிமானப் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்திப் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு அமைவாக யாழ்-கண்டி நெடுஞ்சாலையை மீளத்திறந்து கண்காணிப்புக் குழுவை முழுமையாகச் செயற்படவிடுமாறு நாம் அரசைக் கோரினோம். எமது மக்களது மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு மேலாகத் தனது இராணுவ நலன்களை முன்னிலைப்படுத்தி எமது இரு கோரிக்கைகளையும் அரசு அடியோடு நிராகரித்தது. இயற்கையாக ஏற்பட்ட பேரவலத்திற்கே இரங்க மறுத்து, பொதுக்கட்டமைப்பை நிராகரித்த சிங்களத்தேசம் தானே செயற்கையாகத் திட்டமிட்டு உருவாக்கிய மனிதப் பேரவலத்திற்குக் கருணைகாட்டி ஒருபோதும் நியாயம் செய்யப்போவதில்லை.

புலிகளுக்கு எதிராக ஒரு பொய்யான நீண்ட குற்றப் பத்திரி கையை வாசித்து, பேச்சுமேசையை விவாத மேடையாக்கி, போர்க்கள மாக மாற்றிய அரச பேச்சுக்குழுத் தலைவரும், போரும் செய்வோம் பேச்சும் நடத்துவோம் எனக் குதர்க்கம் பேசும் அரச பேச்சாளர்களும் இருக்கும் வரை பேச்சுக்கள் எப்படி ஆக்கபூர்வமாக முன்னகரும்? எப்படி நல்லெண்ணமும் நம்பிக்கையும் பிறக்கும்? எப்படிச் சமாதானம் வரும்?

மகிந்த உள்நாட்டில் தமிழின அழிப்புப்போரை நடாத்திக் கொண்டு, உலகநாடுகளுக்கு சமாதானம் விரும்பும் ஓர் அமைதிப் புறா வாகத் தன்னை இனங்காட்ட முனைகிறார். தனது ஏமாற்று நாடகத் திற்குத் பக்கத்துணையாக அனைத்துக்கட்சி மாநாட்டை கூட்டியிருக் கிறார். எந்தவொரு பிரச்சினைக்கும் முகங்கொடாது, தட்டிக்கழிக்க விரும்பினால் ஒரு விசாரணைக் கமிசனையோ ஒரு பாராளுமன்றத் தெரிவுக்குழுவையோ அமைத்து, சர்வகட்சி மாநாட்டையோ ஒரு வட்ட மேசை மாநாட்டையோ நடத்தி அதனை முடிவில்லாமல் இழுத்தடிப்பது சிங்கள ஆட்சியாளர்களின் அரசியற் பாரம்பரியம். இதனைத்தான் மகிந்தவும் செய்கிறார். பற்றியெரியும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வுகாணுமாறு நாம் வழங்கிய வாய்ப்புக்களையும் உதாசீனம் செய்து உதறித்தள்ளிவிட்டு, இந்த அனைத்துக்கட்சி மாநாட் டிற்குள் மகிந்த பதுங்கிக்கிடக்கிறார். இந்த அனைத்துக்கட்சிக் குழுவும் கடந்த பத்துமாதக் காலமாக இருட்டுக்குள் கறுப்புப் பூனையைத் தேடி யலைபவன் போலத் தமிழர் பிரச்சினையைத் தேடியலைந்துகொண்டி ருக்கிறது.

அனைத்துக்கட்சி மாநாடு பிசுபிசுத்துப்போக, மகிந்த உலகத்தை ஏமாற்ற மீளவும் ஒரு புதிய துருப்புச்சீட்டை கையில் எடுத் திருக்கிறார். கடந்த ஐந்து தசாப்தங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரு பிரதான சிங்களக் கட்சிகளும் தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க மேற்கொண்ட முயற்சிகளைப் புறநோக்காக ஆராய்ந்து பார்த்தால், இன்று தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள இரு கட்சி இணக்கப்பாடு என்பது உலகத்தை ஏமாற்றுவதற்கான வெறும் கண்கட்டு வித்தையே தவிர வேறன்று என்பது புலப்படும். தென்னிலங்கையின் அரசியலை ஆட்டிப் படைத்துவரும் இரு பிரதான சிங்களக் கட்சிகளும் சாராம்சத்தில் இன வாதக் கட்சிகளே. இவை சிங்களப் பௌத்தப் பேரினவாதச் சகதிக் குள்ளிருந்து பிறப்பெடுத்த இரு பெரும் பூதங்கள். ஒன்றோடொன்று போட்டிபோட்டு, பலப்பரீட்சை நடாத்தி, தமிழரின் உரிமையைப் பறித்து, தமிழரைக் கொன்றுகுவித்து, கொடுமை இழைத்துவருபவையும் இந்த இரு கட்சிகளும்தான். எதிரும் புதிருமாக நின்று, இனக்கொலை புரிந்த இரு கட்சிகளும் இன்று ஒன்றாகக்கூடி, ஒன்றுக்கொன்று சேவகம் செய்து, அதிகாரக் கூட்டமைத்திருப்பது தமிழரை அழித்தொழிப்பதற்கேயன்றி வேறொன்றிற்குமன்று.

அமைதித்தீர்வு காணுமாறு நெருக்கும் சர்வதேச அழுத்தம் ஒருபுறமும் சரிந்துசெல்லும் பொருளாதாரம் மறுபுறமும் பங்காளிக் கட்சி யான மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப்பு அரசியல் இன்னொரு புறமுமாக பல்வேறு தளங்களில் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து நிற்கும் மகிந்த, இந்த நெருக்கடிகளிலிருந்து தன்னைத் தற்காலிகமாக விடுவித்துக்கொள்வதற்காக அமைத்த சந்தர்ப்பவாதக்கூட்டே இந்த இருகட்சி இணக்கப்பாடு. மற்றும்படி இதிற் புனிதமான நோக்கம் எதுவும் கிடையாது. சிங்களப் பௌத்தப் பேரினவாதத்திற்கு மண்டியிட்டுக்கிடந்து அதன் தாளங்களுக்குப் பொம்மலாட்டம் போடும் இந்த இரு கட்சிகளும் ஒருபோதும் தமிழர் பிரச்சினைக்கு நீதியான தீர்வை முன்வைக்கப் போவதில்லை. அனைத்துக்கட்சி மாநாட்டைச் சாகாது வைத்திருப்பதிலும் தமிழருக்கெதிரான இன அழிப்புப்போரைத் தொடர்வதிலுமே மகிந்த அக்கறை காட்டுவார்.

எனது அன்பான மக்களே,

நோர்வேயின் அனுசரணையுடன் அமைதிப் பயணம் ஆரம்ப மாகி, இன்று நீண்டகாலம் ஆகிவிட்டது. நீண்டுசெல்கின்ற இந்தக் காலவிரிப்பில் போரை நிறுத்தி, வன்முறைகளைத் துறந்து, எம்மால் முடிந்தளவிற்கு நாம் சமாதான முன்னெடுப்புக்களைச் செய்திருக்கிறோம். சமாதானச் சூழ்நிலைக்கும் சமரசத் தீர்விற்கும் எம்மால் இயன்றளவு முயற்சித்திருக்கிறோம். சமாதானத்தில் எமக்குள்ள பற்றுறுதியைத் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறோம். போதுமான அளவிற்கு மேல் பொறுமை காத்திருக்கிறோம். அமைதிவழித் தீர்விற்கு எண்ணற்ற வாய்ப்புக்களை வழங்கியிருக்கிறோம். அரசியல்தீர்வை நோக்கி நகரக் கூடிய இடைவெளியைக் காட்டியிருக்கிறோம். நிலவதிர்வுப் பேரலைகள் தாக்கியபோது ஒரு தடவையும் மகிந்த ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது இன்னொரு தடவையுமாக இரண்டு தடவைகள் எமது போர்த் திட்டங்களைத் தற்காலிகமாகத் தள்ளிப்போட்டு, சமாதானத்திற்கு மீண்டும் மீண்டும் சந்தர்ப்பம் வழங்கியிருக்கிறோம். இதனை உலகம் நன்கு அறியும்.

கடந்த ஆண்டு எனது மாவீரர் நாள் உரையில் எமது மக்களது அரசியல் அபிலாசை களைத் திருப்திசெய்யும் ஒரு நீதியான தீர்வை வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய காலத்திற்குள் முன்வைக்குமாறு இறுதியாகவும் உறுதியாகவும் ஜனாதிபதி மகிந்தவை நான் கோரியிருந்தேன். அந்த அவசர வேண்டுகோளை நிராகரித்துப் புறமொதுக்கிவிட்டு, கடந்தகாலச் சிங்களத் தலை மைகள் போன்று மகிந்தவும் தமிழின அழிப்புப் போரைத் தீவிரப்படுத்தியிருக்கிறார். தமிழர் தேசத்திற்கு எதிராகப் போர்ப்பிரகடனம் செய்திருக் கிறார்.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் ஒரு நியாயமான தீர்வை ஒருபோதும் முன்வைக்கப் போவதில்லை என்பது இன்று வெட்டவெளிச்ச மாகியிருக்கிறது. எத்தனை ஆண்டுகள் கடந்து சென்றாலும் எத்தனை யுகங்கள் ஓடி மறைந் தாலும் சிங்களத் தேசத்தில் மனமாற்றம் நிகழப் போவதில்லை என்பதும் தமிழருக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பதும் இன்று தெட்டத் தெளிவாகியிருக்கிறது. எனவே, நடக்கமுடியாத விடயத்தில் நம்பிக்கை வைத்து, தொடர்ந்தும் அதே பழைய பாதையில் நடைபோட இனியும் நாம் தயாரில்லை. எம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளவும் நாம் விரும்ப வில்லை.

சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரேயொரு பாதையைத்தான் இன்று தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கிறது. எனவே, இந்த விடுதலைப்பாதையிற் சென்று சுதந்திரத் தமிழீழத் தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் நாம் தீர்க்கமாக முடிவுசெய்திருக்கிறோம். எமது அரசியற் சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழி நடக்கும் உலகநாடுகளையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்.

தமிழினம் விடுதலைப்பாதையில் வீறுகொண்டெழுந்திருக் கின்ற இந்தப் பெருமைமிகுந்த வரலாற்றுக் காலகட்டத்தில் உலகத் தமிழினத்தின் உதவியையும் பேராதரவையும் நாம் வேண்டி நிற்கி றோம். இந்தச் சந்தர்ப்பத்திலே எமது புலம்பெயர்ந்த உறவுகள் காலங் காலமாக விடுதலைப் போராட்டத்திற்குச் செய்துவரும் பெரும் பங்களிப் பிற்கும் உதவிகளுக்கும் எனது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்தும், உங்கள் தார்மீகக் கடமையை ஆற்றுமாறு வேண்டுகிறேன். இதேபோன்று எமக்காக உணர்வுபூர்வமாக உரிமைக் குரல் கொடுத்துவரும் தமிழக உறவுகளுக்கும் தமிழகத் தலைவர்களுக்கும் எனது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்வதோடு எமது தமிழீழத் தனியரசு நோக்கிய போராட்டத்திற்கு தொடர்ந்தும் நல்லாதரவும் உதவியும் வழங்கி, எமக்குப் பக்கபலமாகச் செயற்படுமாறு அன்போடும் உரிமையோடும் வேண்டுகிறேன்.

எமது தேசத்தின் விடுதலைக்காகச் சாவை அரவணைத்து சரித்திரமாகிவிட்ட எமது மாவீரர்களை நினைவுகூரும் இன்றைய நன்னாளில் எந்த இலட்சியத்திற்காக ஆயிரமாயிரம் விடுதலை வீரர்கள் களப்பலியானார்களோ அந்த இலட்சியத்தை அடைந்தே தீருவோமென உறுதியெடுத்துக்கொள்வோமாக.

**“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”**